பிளவ்ஸ் கிறீம்ஹவுஸ் வழங்கும்
16 வயதினிலே
பொங்கலன்று றிறந்த வெளியரங்கில்
● ஈழத்து பாலசுப்பிரமணியம்
● சுஜதா அத்தநாயக்கா,
● சாந்தி கணபதிப்பிள்ளை
பிரவேசம்: 10-5-3-
ரிக்கற்: பூபாலசிங்கம் புத்தகசாலையிலும், நியூ பிளவ்ஸ்ஹவுஸிலும் பெற்றுக் கொள்ளலாம். முந்துங்கள்!

பக்கங்கள் 8

RECEIVED 1980-1-9

# ஈழநாடு
# The EELANAADU

50 சதம்

மலர் 21 மார்கழி 24 ஸபர் 19 இதழ் 330
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 8-1-80

உடன் பெற்றுக் கொள்ளலாம்.
● மிகவும் சொகுசானது
● அதிகம் கவர்ச்சியானது
● விரும்பிய கலர்களில் கிடைப்பது.
பல்க்கன்ஸ்கூட்டர்கள்
['FALCON SCOOTERS']
பல்க்கன் ஏஜென்சி
ஐந்து சந்தி
யாழ்ப்பாணம்,
போன்:685

★★ முன்னர் என்றுமே கிடைக்காத மாபெரும் வெற்றிவாய்ப்பு!

# அறுதிப்பெரும்பான்மையுடன்
# இந்திரா ஆட்சி அமைக்கலாம்!

(புதுடில்லி)

**இந்தியாவின் 7வது பாராளுமன்றத்துக்கு நடைபெற்ற இடைக்காலத் தேர்தலில், இன்று அதிகாலைவரை வெளியான முடிவுகளின்படி இந்திராகாங்கிரஸ், முன்னர் என்றுமே இல்லாதவகையில் அமோக வெற்றியீட்டி, அறுதிப்பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சி அமைக்கும் தகுதிபெற்றிருப்பதாக உத்தியோகப்பற்றற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.**

1967ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் காங்கிரஸ்கட்சி, 39.37 சதவிகித வாக்குகளைப் பெற்ற அதேநேரத்தில், 1971ல் நடைபெற்ற தேர்தலில் 48.88 சத விகித வாக்குகளைப் பெற்று 1977ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் 35.97 சத விகித வாக்குகளைப் பெற்றிருந்தது. ஆனல் இப்பொழுது நடைபெற்றிருக்கும் தேர்தலில் நேற்று இரவு வரை வெளியான முடிவுகளின்படியும், மேற்கொண்டு வரப் போகும் முடிவுகளின்படியும் 60 சத விகித வாக்குகளை இந்திரா காங்கிரஸ் பெற்றுவிடும் என்று மதிப்பிடப்படுகிறது.

1971ல் இந்திராகாங்கிரஸ் ஏற்படுத்திய தனது சொந்த சாதனையை, இத்தேர்தலில் காணப்போகும் மகத்தான வெற்றியின் மூலம், மிஞ்சிவிடலாம் என்று அரசியல் அவதானிகள் நேற்று நம்பிக்கையுடன் கருத்து வெளியிட்டனர்.

### லட்சம் வாக்குகள்

இந்திராகாங்கிரஸ் பல தொகுதிகளில் லட்சத்துக்கும் அதிகமான வாக்குகளால் வெற்றிபெற்றுள்ளது. நேற்று இரவுவரை வெளியான முடிவுகளின்படி, கர்னாடகத்தில் 3 தொகுதிகளிலும், தமிழ்நாட்டில் ஒரு தொகுதியிலும், மகாராஷ்டிராவில் மூன்று தொகுதிகளிலும், ஆந்திராவில் ஐந்து தொகுதிகளிலும் ஒரு லட்சத்துக்கும் அதிகமான வாக்குகளால் இந்திராகாங்கிரஸ் வெற்றியீட்டியுள்ளது.

(புதுடில்லி)

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கப்பெற்ற தேர்தல் முடிவுகள் வருமாறு:

| | |
|---|---|
| **வெளியான முடிவுகள்:** | **376** |
| இந்திராகாங்கிரஸ் | 286 |
| ஜனதா | 20 |
| தி. மு. க. | 16 |
| லோக்தள் | 24 |
| அர்ஸ் காங்கிரஸ் | 08 |
| இடது கம்யூனிஸ்ட் | 06 |
| வலதுகம்யூனிஸ்ட் | 03 |
| அ. இ. அ. தி. மு. க. | 02 |
| முஸ்லிம் லீக் | 03 |
| இதர கட்சிகள் | 08 |
| சுயேச்சை | 02 |
| இதுவரை வெளியான மொத்த முடிவுகள் | 376 |

## படுதோல்வியை ஜனதா ஒப்புக்கொண்டது!

(புதுடில்லி)

நடைபெற்று முடிவடைந்த இடைக்காலத் தேர்தலில் தமது கட்சிக்கு ஏற்பட்ட படுதோல்வியை ஜனதாகட்சி நேற்று ஏற்றுக்கொண்டது.

ஜனதா பொதுச்செயலாளர் நேற்று இங்கு பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் ''மக்களின் தீர்ப்பை ஒப்புக்கொள்கின்றோம்'' என்று தெரிவித்தார்.

''இத் தேர்தலில் எமக்கு ஏற்பட்ட தோல்வியை ஒத்துக்கொள்ளும் அதேநேரத்தில் நாம் மேலும் விழிப்பாகச் செயல்படுவோம்'' என்று ஜனதா பொதுச்செயலாளர் நேற்று கூறினார்.

## அர்ஸ் ராஜினமா!

(புதுடில்லி)

அர்ஸ் காங்கிரஸ் (யு. காங்கிரஸ்) கட்சிக்கு ஏற்பட்ட கடுமையான தோல்வியைத் தொடர்ந்து, கர்னாடக மாநில முதல்வரும், அர்ஸ் காங்கிரஸ் தலைவருமான திரு. தேவராஜ் அர்ஸ் நேற்றிரவு தமது பதவியை ராஜினமா செய்து கொண்டார்.

ஆனலும், கர்னாடக மாநில சட்டசபையைக் கலைக்குமாறு திரு. அர்ஸ் நேற்று சிபார்சு எதுவும் செய்யவில்லை.

## அண்ணு தி.மு.க. படுதோல்வி

(சென்னை)

தமிழ்நாட்டின் மொத்த 39 தொகுதிகளுக்கும் கூட்டுக் கட்சிகளுடன் போட்டியிட்ட அ. இ. அ. தி. மு. கழகம் நேற்று இரவுவரை அறிவிக்கப்பட்ட 33 தொகுதிகளுக்கான முடிவுகளில் ஒரு தொகுதியில் மட்டுமே வெற்றிபெற்றுள்ளது. இதனுடன் கூட்டுச் சேர்ந்த மற்றுமொரு முக்கிய கட்சியான ஜனதா நேற்றிரவு வரை வெளியான முடிவின்படி ஒரு தொகுதியிலும் வெற்றிபெறவில்லை.

கடந்த பாராளுமன்றத்தில் 18 தொகுதிகளைத் தன்னகத்தேகொண்டிருந்த அ. இ. அ. தி. மு. கழகத்துக்கு இம்முறை படுதோல்வி கிடைத்திருப்பதாக அவதானிகள் தெரிவித்தனர்.

தடுத்துவைக்கப்பட்டிருக்கும்'

## 16 ஊழியர் விவகாரம்:
## இன்னும் நடவடிக்கை இல்லை!

[யாழ்ப்பாணம்]

யாழ். 'கல்விக்கந்தோரில் ஆலோசனை மண்டபத்தில், தடுத்துவைக்கப்பட்டிருக்கும்' 16 ஊழியர் விஷயத்தில் இதுவரை எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை!

நேற்றும் அவர்கள் புறம்பான பதிவுஇடாப்பில் கையெழுத்திட்டபின்னர் மாலை 4-15 மணிவரை ஆலோசனை மண்டபத்தில் தங்கியிருந்தனர்.

இவர்கள் நிலைமைபற்றி அரசாங்க எழுதுவினைஞர்சங்க யாழ் கிளைச்செயலாளர் திரு. செல்வநாயகம்; அரசாங்க லிகிதர்சேவைச் சங்க செயலாளர் திரு. கே. சி. கனகரத்தினம் ஆகியோர், பாதிக்கப்பட்ட ஊழியர்களுடன் சென்று யாழ். அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமியைச் சந்தித்ததைத் தொடர்ந்து அவர் மேலிடத்துடன் தொடர்பு கொண்டார். ஆனல் நேற்று வரை மேலிடத்திலிருந்து எவ்வித புதிய அறிவித்தலும் கிடைக்கவில்லையென்று பாதிக்கப்பட்ட ஊழியர் தெரிவித்த

(8ம் பக்கம் பார்க்க)

### தமிழ்நாடு

(சென்னை)

தமிழ்நாட்டின் மொத்த லோகசபைத் தொகுதிகள்: 39. இவற்றில் நேற்றிரவு வரை அறிவிக்கப்பட்ட முடிவுகள் 33. கட்சி நிலவரம் வருமாறு;

| | |
|---|---|
| இ. காங்கிரஸ் | 18 |
| தி.மு.க. | 16 |
| முஸ்லிம்லீக் | 01 |
| அ. இ. அ. தி. மு. க. | [illegible] |

ஆந்திராவில் இந்திரா:

## 2,19,000 அதிகப்படி வாக்குகளால் வெற்றி!

(புதுடில்லி)

ஆந்திரப் பிரதேசத்தில் மேடத்தொகுதியில் திருமதிஇந்திராகாந்தி 2 லட்சத்து 19,090 அதிகப்படியான வாக்குகளினல் வெற்றியீட்டியுள்ளார், அதே நேரத்தில் வடமாநில தொகுதியான ராய்பரேலியில் இவர் 64,000 அதிகப்படியான வாக்குகளால் முன்னணியில் திகழ்கின்றார் என்று நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### தேவை

மேசன்மாரும், கூலியாட்களும்உடன் வேலைக்குத்தேவை. தொடர்பு கொள்ளவும்: K.P. ஆனந்தன், 1/1, மின்சார நிலைய வீதி, (கிருஷ்ணு ஏஜன்சி அருகே) யாழ்ப்பாணம் மற்றும் A. தம்பித்துரை, டச்சு வீதி, கட்டப்பிராய், கோப்பாய் தெற்கு, (முழுமதி சனசமூக மன்றத்தடி) கோப்பாய். 4584

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் காங்கேசன் துறை றோட்டிலிருந்து 50 யார் தூரத்தில் மில்க்வைற் ஸ்தாபனத்துக்கும் நாச்சிமார் கோவிலுக்குமிடையில் ஒன்றரைப் பரப்புக் காணியும், வீடும் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு: க. செல்லமுத்து, 586/3, கே, கே.எஸ். றோட், யாழ்ப்பாணம். 4575

### விற்பனைக்கு

முப்பத்தையாயிரம் ரூபா பெறுமதியான ஐந்தரைப் பரப்பு காணியுடன் சேர்ந்த கட்டி பூர்த்தியாக்கப்படாத வீட்டுடன் விற்பனைக்குண்டு. கிணறும், தென்னை, பலாவும் உண்டு. கைதடி, நுணுவிலில், சாவகச்சேரி பாடசாலைக்கு முன்புறம் அமைந்துள்ளது. தொடர்பு கொள்ளவும்: சிவன் ஸ்ரோர்ஸ், முழங்காவில், பூநகரி. 4589

கலனுக்கு 175 மைல் ஓடக் கூடியது. Honda C-90 Self-Starter மோட்டார் சைக்கிள் உண்டு. விலை 5950/- தொடர்புகொள்க. S. ஞானராசா, ஓட்டோஸ் லிமிட். யாழ்ப்பாணம். 4590

கோண்டாவில் கிழக்கு குமரன்மில் அருகாமையில் மூன்று பரப்புகாணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்:- கா. செல்வராசா, றோயல் கல்வி நிலையம், திருநெல்வேலி வடக்கு, பலாலி வீதி, திருநெல்வேலி. 4591

தலையாளியில். நான்கு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பரப்பு ரூ. 23,000 வரை. தொடர்பு- கா. கு. ஜெயராஜதேவன், சட்டத்தரணி, 7, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். 4593

### உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவு சங்கம்

## விளம்பரம்

உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கத்தில் ரகம் பிரிக்கப்பட்ட 5000 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கு இருக்கின்றது. 18-1-1980க்கு முன்னர் ரூபா 100/- மேற்படி சங்கத்தில் கட்டி கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளவும். கேள்விப்பத்திரங்கள் யாவும் 21-1-80 பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் ''பொதுமுகாமையாளர்'' உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம், வல்வெட்டித்துறை, என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**பொது முகாமையாளர்,**
உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்,
வல்வெட்டித்துறை.
4588


### இயக்குநர்சபைத் தலைவர்

[மன்னார்]

முருங்கன் ப. நோ. கூ.சங்க இயக்குநர்சபைக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஜனுப் என். எம். ஏ. காசிம் இயக்குநர்சபைத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

''யாழ். குடாநாட்டில்

# கைத்தொழில்துறை அதிக வளர்ச்சி பெற்றுள்ளது''

## இலங்கை வங்கித் தலைவர் கருத்து

(யாழ்ப்பாணம்)

''யாழ் குடாநாட்டில் குறைந்த எண்ணிக்கையாக இருந்த கைத்தொழில்துறை, இன்று பெருமளவில் வளர்ச்சியடைந்துவருகின்றது. குடாநாட்டு கைத்தொழில்துறை வளர்ச்சிக்கு இலங்கைவங்கி தனது சேவையை வழங்கும்''

இவ்வாறு இலங்கை வங்கித் தலைவர் திரு. நிஸங்க விஜயவர்த்தன, வடஇலங்கை கைத்தொழிலாளர் சங்கம் அளித்த இராப்போசன விருந்திற்கு நன்றிதெரிவித்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

விருந்து வைபவத்திற்கு வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு உட்பட, வடஇலங்கையின் சகல கைத்தொழிலாளர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். வைபவம், யாழ். சுபாஸ் விருந்தினர் விடுதி மேல்மாடியில் தொழிலதிபர் திரு. எஸ். செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. இலங்கை வங்கியின் வடபிரதேசக் கிளைகளின் உயர்அதிகாரிகள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டனர். திரு. நிஸங்க விஜயவர்த்தன தொடர்ந்து உரையாற்றுகையில்;

''அரசு கைத்தொழில் துறையை ஊக்குவிப்பதற்கு செயல்த்திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றிவருகின்றது. அரசின் வசதியை நீங்களும் பயன்படுத்தி, உங்கள் கைத்தொழில்களை வளர்த்தெடுக்க வேண்டும்'' என்றார்.

வரவேற்புரை நிகழ்த்திய தொழிலதிபர் திரு. ஆர். ஜே. குணரெத்தினம், ''இலங்கை வங்கியின் தலைவர் நிஸங்க விஜயவர்த்தன அரசாங்க நிர்வாகசேவையில் கடமை புரிந்து, மக்களின் நல்லாதரவுபெற்றவர். மத நம்பிக்கையுடையவர். அமைதியானமுறையில் பிரச்னைகளைத் தீர்த்துவைப்பவர். அப்படிப்பட்டவர் இலங்கை வங்கியின் அங்கிராசனராக இருப்பது சகலரதும் அதிர்ஷ்டம் என்று சொல்லலாம் வடபகுதியின் கைத்தொழிலாளர்கள் அனைவரும் இலங்கை வங்கியின் சேவைகளை நன்கு பயன்படுத்தி இலங்கை வங்கியின் வருமானத்தை உயர்த்தி வருகின்றனர். காலப்போக்கில், இலங்கையில் அதிக வருமானம்பெற்ற வங்கிக் கிளையாக, யாழ் கிளை இருக்குமென நான் உறுதியளிக்கின்றேன் என்று கூறினார். (செ)

......

### ஆசிரியர்களுக்கு

## நாளை முதல் 3 தினங்கள் கடமைநாட்கள்

(உடுப்பிட்டி)

எதிர்வரும் 9, 10, 11ம் திகதிகள் ஆசிரியர்களுக்குக் கடமை நாட்களாகக் கணிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்நாட்களில் ஆசிரியர்கள் காலை 8 மணிமுதல் மாலை 3-30 மணிவரை பாடசாலைகளில் கடமை புரிய வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தினங்களில் லீவுபெறும் ஆசிரியர்களுக்கு சமயோசித லீவு வழங்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## 1-ம் ஆண்டு நினைவு அஞ்சலி



ஜுட் ஜே கிறிஸ்ரோப்பர்

தோற்றம்: 23-10-1952
மறைவு: 10-1-1979

இவரது ஆன்ம சாந்திக்காக தைமாதம் 9-ம் 10-ம் திகதிகளில் யாழ் ஆசனக் கோவிலில் காலை 6-15 மணிக்கு பலிப்பூஜைகள் ஒப்புக்கொடுக்கப்படும். 10-1-30 ல் 125, பாங்சால் வீதியில் உள்ள இல்லத்தில் மாலை 6-80 மணிக்கு ஒரு செப வழிபாடும் நடைபெறும் என்பதை இவரில் அன்புள்ள அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

''நேசித்தோம்
நினைத்திருப்போம்''

தாயும்
சகோதரர்களும்
4594


## சுயவீடமைப்புத் திட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நரிப்புலித் தோட்டம் என்னும் கிராமத்தில் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவின் சுயவீடமைப்புத் திட்டத்தின்கீழ் அறுபது வீடுகள் அமைய உள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை மட்டுநகர் முதல்வரும், பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரை செய்திருப்பதாகவும், வேலைகளை தேசிய வீடமைப்பு இலாகா பொறுப்பு ஏற்றுள்ளதாகவும் மேற்படி கிராம அபிவிருத்தி சங்கத்தலைவர் திரு. க. பாலிப்போடி தெரிவித்தார்.

......

## விவசாயிகள் அதிருப்தி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தொகுதியில் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் சிலர் தங்கள்கடமையை ஒழுங்காக மேற்கொள்கின்றார்கள் இல்லை என விவசாயிகள் அதிருப்தி தெரிவித்துள்ளார்கள்.

விவசாயிகளின் பிரச்னைகளை தீர்க்கும் பொருட்டு காணி, விவசாய அமைச்சரினால் நியமனம் செய்யப்பட்ட பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்களுக்கு பகுதிகள் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

இவர்களில் சிலர் தங்கள் பகுதிகளுக்குச் சென்று கடமையை சரியாகப் புரிகின்றார்கள் இல்லை எனவும் இவர்களை [illegible] விவசாயிகள் [illegible]கள்.

### மீண்டும் கப்பல்சேவை

[மன்னார்]

காலநிலை சீர்கேடு காரணமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த தலைமன்னார்-ராமேஸ்வரம் கப்பல்சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முதல் தடவையாக் ராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னார்வந்த கப்பலில் 272 பிரயாணிகள் மட்டுமே இலங்கை வந்தனர். இவர்களில் 200 பேர் உல்லாசப்பிரயாணிகளாவர்.

# மன்னார் செய்திகள்

### நீரில் மூழ்கி மரணம்

(மன்னார்)

பேசாலையைச்சேர்ந்த அலோசியஸ் கில்லர் குவாஸ் என்ற 11 வயதுச்சிறுவன், பேசாலை தேவர் தோட்டக் குளத்தில் குளித்துக் கொண்டிருக்கையில் நீரில்மூழ்கி மரணமானார்.

மரணவிசாரணை நடத்திய சட்டத்தரணியும், மரணவிசாரணை அதிகாரியுமான திரு. கயஸ் பெல்டானோ நீரில் மூழ்கி மூச்சுத்திணறியதால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

### மரணவிசாரணை அதிகாரிகள் சங்கம்

(மன்னார்)

மன்னார் மாவட்ட மரண விசாரணை அதிகாரிகள் ஒன்றிணைந்து மன்னார் மரணவிசாரணை அதிகாரிகள் சங்கம் ஒன்றை அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைத்தனர்.

மேற்படி சங்கத்தின் போஷகராக எம். ஏ. ஆலம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். தலைவராக சமாதான நீதவானும் சட்டத்தரணியுமான திரு. கயஸ் பெல்டானோவும், செயலாளராக எம். பி. ஏ. ஜபாரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

### வாடகைச்சபை

(மன்னார்)

மன்னார் வாடகைச்சபைக் கூட்டம் மேற்படி சபைத் தலைவரும், சட்டத்தரணியுமான திரு. கயஸ் பெல்டானோ தலைமையில் கூடியது.

மேற்படி கூட்டத்தில் 1978-79ம் ஆண்டுகளில் மன்னார் வாடகைச்சபை செயல்படாமல் இருந்தது. தற்போது வாடகைச்சபை செயல்பட்டு வருகிறது. இத்தகவலை மன்னார் மாவட்ட மக்கள் அறியும் முகமாக ஒலிபெருக்கிமூலம் வாடகைச்சபை இயக்கம்பற்றி அறிவிக்கவேண்டும் எனத் தீர்மானித்து கூட்டம் இம் மாதம் 30ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

### பஸ் மோதியது

[மன்னார்]

மன்னார் சாவற்காடு வட்டாரச் சந்தியில் பஸ்ஸுடன் மோதுண்ட சைக்கிளில்சென்ற இருவர் பலத்த காயங்களுடன் மன்னார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பயணம்செய்த இரு சைக்கிள்களும்சேதமடைந்துள்ளன.

### தொண்டமான் மன்னார் விஜயம்

(மன்னார்)

கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் இம்மாதம்10ந் திகதி மன்னாருக்கு விஜயம் செய்யவுள்ளார்,

மன்னார் கச்சேரியில் நடைபெறும் மகாநாடொன்றில் மன்னார் மாவட்ட கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி பற்றியும், மேலும் மன்னார்மாவட்டத்தில் மேற்கொள்ளவேண்டிய கைத்தொழில் அபிவிருத்தி பற்றியும் அமைச்சர் உரையாற்றுவார்.

### முடிச்சுமாறிகள் தொல்லை

(மன்னார்)

மன்னாரில் முடிக்சுமாறிகளின் தொல்லை அதிகரித்துள்ளது. அநேகமாக பிரயாணிகள் பஸ்ஸில் ஏறும்போதே முடிச்சுமாறிகள் தமது கைவரிசையைக் காட்டுகின்றனர்.

பலமுடிச்சுமாறிகள் அவ்வப்போது பொதுமக்களால் பிடிக்கப்பட்டு மன்னார் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் அநேகர் வெளியூரைச் சேர்ந்தவர்களாவர்.

### வாகனங்கள் ஏற்றமுடியாது

[மன்னார்]

தலைமன்னார் - ராமேஸ்வரம் கப்பலில் இம்மாதம் 15ந் திகதி வரை வாகனங்கள் ஏற்றிக் கொண்டுவரவோ அல்லது போகவோ முடியாது. இம் மாதம் 15ந் திகதிவரை கடல் அலை வேகமாக வீசுமென்றும் காலநிலை இன்னும் சீரடையவில்லையென்றும் அறியப்படுகிறது. ஆதலால் காலநிலை சீரானதும் இம்மாதம் 15ந் திகதிக்குப்பின்னர்தான் வாகனங்கள் ஏற்றிக்கொண்டு செல்லவோ அல்லதுகொண்டுவரவோ முடியுமென்று அறியப்படுகிறது.

### பாங்கொக் பிரதிநிதிகள் விஜயம்

(மன்னார்)

பாங்கொக் நாட்டைச் சேர்ந்த சர்வதேச தொழில் ஸ்தாபனப்பிரதிநிதிகள் மன்னாருக்கு விஜயம்செய்தனர். மூதூர் எம்.பி.யும். மன்னார்மாவட்ட அமைச்சருமான ஜனுப் மஹ்றூப் தலைமையில் மன்னார் கச்சேரியில் பாங்கொக் நாட்டைச் சேர்ந்த சர்வதேச தொழில் ஸ்தாபன பிரதிநிதிகள்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய மன்னார் எம். பி. திரு. பி.எஸ். சூசைதாசன் மன்னார் மாவட்டத்தில் செய்யப்படவேண்டிய அபிவிருத்தித்திட்டங்கள்பற்றி எடுத்துரைத்தார். மற்றும் மன்னார் அபிவிருத்தி திட்டம்பற்றி உயர் அதிகாரிகள் பாங்கொக் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினர். திட்டமிடல்பிரிவு உயர்அதிகாரிகள், பல்கலைக் கழக பொருளாதார நிபுணர்கள் பலரும்இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்,

### சிவராத்திரிமட பரிபாலன சபை

(மன்னார்)

திருக்கேதீஸ்வரம் மகா சிவராத்திரி மடபரிபாலன சபையின் தலைவராக குருநாகல் அரசாங்க அதிபர் திரு. என். ஜெயநாதன் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நிர்வாக சபை விபரம் வருமாறு. தலைவர்: திரு. என். ஜெயநாதன், உபதலைவர்கள்: திரு. மு. ஆறுமுகம், ஏ. ஜே. செந்தில்நாதன், திரு. அ. பாஸ்கரதாஸ், செயலாளர்கள்: திரு. கே. சண்முகம், எஸ். கனகரத்தினம், பொருளாளர்: திரு. க. கு. பரமசிவம், உபபொருளாளர்கள்: திரு. த. ஜே. செல்வநாயகம் திரு. எஸ். என். நடராசா. (அ)

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

''திறமைகள் பலப்பல. அவைகளை இணைத்திருக்கும் முறையோ மிக பெரியது. மிக மிகத் தேவையானது''

- அறிஞர் அண்ணா

## மக்கள் கருத்து

### இவ்வீதிக் குறைபாடு நிறைவேறுமா?

கரவெட்டி கிழக்கில் உள்ள கேவளை வீதியிலிருந்து ஆரம்பமாகும் வளர்மதி வாசிகசாலை வீதி, சாவகச்சேரி பிரதான வீதியுடன் இணைக்கப்பட்டுள்ளது. இவ்வீதி கரவெட்டி கிழக்கில் வாழும் மக்களுக்குப போக்குவரத்துச் செய்வதற்கு பிரதானமானதாகும். மேற்படி வீதி முன்னைய அரசாங்க காலத்தில் கேவளை வீதியில் இருந்து அரை மைல் தூரத்திற்குச் செப்பனிடப்பட்டிருந்தது. ஆனால் தற்போது அரசாங்கத்தால் தொகுதிரீதியாக வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து மீதியான பகுதியைச் செப்பனிடுவதற்கு ஒரு குறிப்பிட்ட தொகைப் பணம் ஒதுக்கப்பட்டு வேலைகள் சாவகச்சேரிப் பிரதான வீதியில் இருந்து ஆரம்பமாகியுள்ளது. ஆனால் இவ்வேலைகள் ஓரளவு தூரத்துடன் நிறைவு பெறுவதால், முன்பு கேவளை வீதியில் இருந்து வேலை ஆரம்பமாகியும், தற்போது சாவகச்சேரி வீதியிலிருந்து ஆரம்பமாகி இடையில் நிறுத்தப்படுவதால் இவ்வீதியின் நடுப்பகுதியில் கிட்டத்தட்ட 300 யார் எதுவித வேலையும் இல்லாமல் மணலாகவே உள்ளது. எனவே இம் மீதியான பகுதியையும் பூரணமாகச் செப்பனிடுவதற்கு உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினரும் ஏனைய உயர் அதிகாரிகளும் நடவடிக்கை எடுத்து நிறைவேற்றுவார்களா?

மேலும் இக்கிராமத்திற்கு அரசாங்கத்தினால் 1979 ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தினால் மின்சார விநியோகத்திற்கு பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் அது பிரதான வீதிக்கு தொடர்ந்து வழங்கப்படவில்லை. ஆகையினால் 1980 ம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து கேவளை பிரதான வீதிக்கு மின்விநியோகம் செய்து அப்பகுதி மக்களின் இக்குறைபாட்டினை உடுப்பிட்டிப் பாராளுமன்ற உறுப்பினரும் ஏனைய உயர் அதிகாரிகளும் நிறைவேற்றிவைப்பார்களா?

**க. பரிபாலசிங்கம்.**
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

0 0 0

### மேலதிகாரிகள் கவனத்திற்கு

பூநகரி பள்ளிக்குடா பகுதியில் யானைகளின் அட்டகாசத்தால் மக்கள் பெரும்பீதி அடைந்துள்ளனர். கடந்த 3 திகதி இரவு ஒருவர் யானையினால் கொல்லப்பட்டார்.

எனவே தயவு செய்து இப்பகுதி மக்கள் நலன்கருதி வனவிலங்கு அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு குறித்த யானையைச் சுடுவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யுமாறு பொதுமக்கள் சார்பில் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்து எமது பகுதிக் கிராம சேவை அலுவலர்கள் சிலர் கடமையில் ஒழுங்கீனம். இதனால் மக்கள் நாளாந்தம் தம் அலுவல்களைப் பெறமுடியாது கவலையடைகின்றனர். எனவே அவர்களைத் தண்டிக்க முற்படாது, அவர்களுக்கு நற்புத்திமதி கூறி, கடமைக்கு ஒழுங்காகச் சமுகம் கொடுக்க ஆவன செய்யுமாறும் மக்கள் சார்பில் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**யோ. ப. அரியநாயகம்.**
3 ம் கட்டை,
பூநகரி.

# இந்திரா மீண்டும் பிரதமர் - அவரது இலங்கை 'உறவின்' தன்மை

இந்தியப் பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் வந்து கொண்டிருக்கின்றன. திருமதி இந்திரா காந்தியின் காங்கிரஸ் கட்சியே வெற்றியீட்டிக் கொண்டிருக்கிறது, திருமதி இந்திரா காந்தியே நவபாரதத்தின் 6வது பிரதமர் என்ற நம்பிக்கை வலுப்பெற்றிருக்கிறது.

தேர்தல் ஆரம்பிக்கு முன்னரே பொதுவாக இந்திரா பக்கம்தான் காற்று வீசிக் கொண்டிருந்தது, உள்நாட்டு நிலைமைகளும், வெளிநாட்டு நிலைமைகளும் இந்திராவுக்குத்தான் கூடிய வாய்ப்பை அளிக்கத்தக்கதாகத் தேர்தலை அண்மித்த காலத்தில் இருந்தன.

உள்நாட்டில், நிலையான ஓர் அரசை அமைக்கக்கூடியவர் திருமதி இந்திரா காந்தி ஒருவரே என்ற எண்ணம் பொதுவாக இருந்துகொண்டிருந்தவேளை, பாகிஸ்தானுக்கான அமெரிக்காவின் ஆயுத விநியோகம், பங்களாதேஷ் எல்லையில் இடம்பெறும் சிறு சிறு சம்பவங்கள் என்பன, வெளிநாடுகளுடனான இந்த நிலைமைகளுக்கும் இந்திராவே தான் ஏற்றவர் என்ற ஓர் எண்ணத்தையும் தோற்றுவித்துக்கொண்டிருந்தது.

### தேர்தல் பரிசு

இவை தவிர, இந்திராவை விசாரணை செய்வதற்கு ஷா கமிஷனுக்கு அதிகாரமில்லை என்று நீதிபதி திரு, சௌளா வழங்கியிருந்த தீர்ப்பும் இந்திராவுக்குத் தேர்தல்காலப் பரிசாகக் கிடைத்தது.

இப்படிப் பல, இந்திராவே இந்தியாவின் அடுத்த பிரதமராகலாம் என்று எதிர்பார்ப்பதற்குப் பொதுவான காரணங்களாக இருந்தன.

சர்வதேச அரங்கின் அபிப்பிராயமும் பொதுவாக அந்த விதத்தில்தான் இருந்தது. இலங்கையிலும் அவ்வாறேதான் நம்பப்பட்டது.

### இந்திரா-இலங்கைத் தலைவர்கள் உறவு

இந்திராவுக்கும்இலங்கையில் பல்வேறு கட்சிகளின் தலைவர்களுக்குமிடையேயான 'உறவு முறை' பற்றிச் சற்றுப் பார்த்தல் சுவாரஷ்யமானதாக இருக்கும்.

இலங்கையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் ஐக்கிய தேசியக்கட்சியினர், கடந்த பொதுத்தேர்தலில் இந்திராவையும் தங்கள் தேர்தல் பிரச்சாரத்துக்கு வெகுவாகப் 'பாவித்தே' ஆட்சியைக் கைப்பற்றினர்கள்.

### ஐ. தே. க: பிரசாரத்தில் இந்திரா காந்தி

இந்தியாவில், இந்திரா காந்தியின் ஆட்சியுடன் திருமதி சிறிமாவோவின் ஆட்சியையும் ஒப்பிட்டு, இந்தியாவில் இந்திய மக்களால் நிராகரிக்கப்பட்ட விதத்திலேயே இலங்கையிலும் சிறிமா நிராகரிக்கப்படவேண்டுமென்ற விதத்தில் அவர்கள் பிரசாரங்களைச் செய்தனர்.

ஜனநாயகத்துக்கு முரணான விதத்தில் ஊழலும், நிர்வாகச் சீர்கேடும் மிக்க ஒரு சர்வாதிகார ஆட்சியை இந்திரா நடத்தினரென்று இவர்கள் பேசினர்கள்.

### இருள் சூழ்ந்த காலங்கள்

ஆட்சிக்கு வந்தபின்னரும் கூடப் பிரதமர் திரு. பிரேமதாசா பாராளுமன்றக் கட்டடத்தில் இந்திய முன்னாள் பிரதமர்திரு. மொரார்ஜி தேசாய்க்கு அளித்த வரவேற்பு வைபவத்திலேயே இந்தியாவிலும் இலங்கையிலும் இந்தியாவினதும் சிறிமாவினதும் ஆட்சிக்காலங்களை ''இருள் சூழ்ந்த காலங்கள்'' என்று குறிப்பிட்டார்.

அதன்பின்னர் பாராளுமன்றத்திலும் ஒரு தடவை இந்திரா பிரதமரானால் என்ன, சர்வாதிகாரியானல் என்ன, அவரின் தவறுகளை நாம் கண்டிப்போம்என்றும் திரு. பிரேமதாசா கூறினர்,

-- மாலி --

### இந்திராவுக்காக அநுரா வாதாடினார்

தேர்தல் காலத்தில் ஐ. தே. க. தலைவரான ஜனதிபதி ஜயவர்த்தனவும் மற்றும் சிலரும் இந்திரா காந்தி பேசியதாக வெளிவந்த பத்திரிகைச்செய்திகள் சிலவற்றைச் சமர்ப்பித்து இந்தியாவின் கீர்த்திமிக்க ஒரு தலைவிக்கு எதிராக இப்படி பேசி இரு நாடுகளுக்குமிடையிலான பாரம்பரிய உறவுகளில் குந்தகத்தை ஏற்படுத்தப்போகும் விதத்தில் இவர்கள் நடந்திருக்கிறர்களென்று சிறிமாவோவின் புதல்வர் அநுரா டண்டாரநாயக்கா வரவுசெலவுத் திட்டத்தின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் இந்தியாவுக்காக வாதாடினார்.

இலங்கையில், திருமதி சிறிமாவோவுடன்தான் இந்திரா 'உறவு' என்று பொதுவாகக் கூறப்படுவதுமுண்டு.

இந்திய இடைக்காலத்தேர்தலின் அரம்ப காலகட்டத்திலேயே இந்தியா சென்று இந்திராவைச் சந்தித்து வந்தவர் சிறிமாவோ.

ஆக, சிறிமாவோவுடன் இந்திராவுக்கு 'நட்பு' தானிருந்தாலும், ஜே. ஆர். அவரைக் கண்டித்து தேர்தல் காலங்களில் பேசித்தானிருந்தாலும் இந்திரா இந்தியாவின் அடுத்த ஆட்சியை அமைக்கும் பட்சத்தில் இருநாடுகளுக்கிடையிலான ராஜரீக உறவுகள் எதுவும் பாதிப்படைந்து விடும் என்று கூறிவிடமுடியாது.

இலங்கையின் தற்போதைய அரசாங்கத்துடன் ஜனதா அரசு புறம்பான விதத்தில் நட்புறவைக் கொண்டிருப்பதாக இந்திராவும் முன்பொரு முறைஒரிடத்தில் தெரிவித்திருக்கிறர்.

ஐ. தே. க, சு. க. ஆகியவற்றுடன் தமிழர் விடுதலைக் கூட்டணியும் இந்திராவுடன் உறவைக் கொண்டேயிருக்கறது.

இடைத்தேர்தலுக்கு இந்தியா தயாரானதும் முதன் முதலாக அவரது வெற்றிக்கு ஆதரவும் வாழ்த்தும் தெரிவித்து புதுடில்லிக்கு தந்தி யனுப்பியது தமிழர் விடுதலைக் கூட்டணிதான்!

---

கருணாநிதிக்கும் இந்திராவுக்கும் தேர்தல் ஒப்பந்தம் ஏற்படு முன்னரே அனுப்பப்பட்ட தந்தி அது!

---

ஏற்கனவே கூட்டணியின் செயலதிபர் திரு. அமிர்தலிங்கமும் அவருக்கு முன்னதாக மானிப்பாய் எம். பி. திரு. தர்மலிங்கமும் இந்தியாவில் இந்திராவைச் சந்தித்துத் திரும்பியுள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் சுதந்திரகட்சியினரும் பகிரங்கமாகவே இந்திராவுடனன தங்கள் நல்லுறவை வெளிப்படுத்திக் கொள்ளும் வேளை கம்பூச்சியா விவகாரத்தில் இவர்கள் முரண்பாடான கொள்கையை கொண்டிருக்கிறர்கள்.

கம்பூச்சியாவில் சீனவின் ஆதரவைப் பெற்ற 'போல் பொட்' அரசாங்கத்துக்கு ஆதரவான கொள்கையை சிறிமாவோ கொண்டிருக்கிறர். ஆனல் வியட்நாமின் ஆதரவுடனான ஹெங்சமரினின் புதிய அரசுக்கு ஆதரவான கொள்கையையே கூட்டணியின் மானிப்பாய்த் தொகுதி உறுப்பினர் தர்மலிங்கம் பல இடங்களிலும் வலியுறுத்துகிறர்.

இந்த விவகாரத்தில் இந்திராவுக்கும் தர்மருக்கும் தான் உறவு ஏற்படுகிறது.

பங்களாதேஷ் யுத்தத்தின் போது பாகிஸ்தான் படைகளை கராச்சியிலிருந்து டாக்காவுக்கு (கிழக்குப் பாகிஸ்தானுக்கு கொண்டு செல்வதற்கு வசதியளித்து விமானங்களைக் கொழும்பில் தங்கிச்செல்ல அனுமதியளித்திருக்காவிட்டால் 'பங்களாதேஷ்' என்ற நாடே உருவாகும் நிலை எழுந்திருக்காது என்றும் கூறப்படுவதுண்டு.)

அவ்வேளையில், பாகிஸ்தான் விமானங்கள் கொழும்பில் இறங்கிச் செல்ல அனுமதிக்கக் கூடாது என்று பலதடவைகள் அப்போதய தேசிய அரசுப் பேரவையில் பிரச்னை கிளப்பியவர் தர்மலிங்கம்,

இந்த விவகாரத்தை எடுத்தால், அதில், இந்திய வானெலியில் அந்த யுத்தக் களங்களில் பணிபுரிந்து கொண்டிருந்த இலங்கையரான ஒரு பிரபல பத்திரிகையாளர் அண்மையில் சம்பாஷணை ஒன்றின்போது கூறியதுபோல; இந்திராமீது உரிமை கொண்டாட திருமதி சிறிமாவோவுக்கு எந்தவித யோக்கியதையுமில்லை; அந்த உரிமை திரு. தர்மலிங்கத்துக்கு மாத்திரம்தான் இருக்க முடியும் என்றே கூறவேண்டும்.

......

சேவைக்காலப் பயிற்சி:

### இளம்ஆசிரியர்கள் ஏமாற்றம்

(மட்டக்களப்பு)

புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கான சேவைக் காலப்பயிற்சி வகுப்பு நடைபெறவில்லை. இதனல் விண்ணப்பம் செய்த ஆசிரியர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளாகள்.

புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களிடமிருந்து அமைச்சினல் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்வகுப்பிற்கு ஆசிரியர்களிடம் விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. மேற்படி பயிற்சி வகுப்பு பத்து நாட்கள் வதிவிட வகுப்பாக ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெறுகின்றது.

மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெறவிருந்த இவ்வகுப்பிற்கு 150க்கு மேற்பட்டோர் நாடெங்கிலும் இருந்து விண்ணப்பம் செய்திருந்தனர். இதன் பிரகாரம் 5-12-79--15-12-79 வரை மேற்படி வகுப்பு நடைபெறும் என அறிவிக்கப்பட்டு பின்பு ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இவ்வகுப்பு ஏனைய பயிற்சிக்கல்லூரிகளில் நடைபெற்று முடிந்து விட்டது. ஆனல் மட்டக்களப்பு பயிற்சிக்கலாசாலைக்கு விண்ணப்பம் செய்தவர்கள் ஏமாற்றம் அடைந்து விட்டனர் என இளம் ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார். (அ)

## நாடும் நடப்பும்

இந்தியத் தேர்தல் முடிவுகள் இன்று மாலைக்குள் முழுதுமாக வெளிவந்து விடுமென எதிர்பார்க்கலாம்.

தேர்தல் முடிவுகள் வெளிவந்து கொண்டிருக்கும் போக்கைப் பார்த்தால் திருமதி இந்திரா காந்திதான் மீண்டும் பிரதமராக வருவார் என்று தோன்றுகிறது.

அவசரகாலநிலையில் இந்திராவும் அவரது அதிகாரிகளும் பெரும் கொடுமைகள் இழைத்ததாக இந்தியாவில் 1977-ல் ஆட்சிக்குவந்த ஜனதாக்கட்சியினரும் மற்றும் கட்சியினரும் பிரசாரம் செய்தனர். கமிஷன்கள் நியமிக்கப்பட்டன. நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்திராவை அரசியலிலிருந்தே ஒழித்துக்கட்டுவதற்கு என்னென்ன செய்யமுடியுமோ அத்தனை முயற்சிகளையும் ஜனதாத்தலைவர்கள் சிலர் செய்து பார்த்தனர்.

ஆனல் ஆட்சி பீடத்திலிருந்த இரண்டரை ஆண்டுகளிலும் ஜனதாத்தலைவர்கள் தங்களுக்குள் சிண்டுபிடித்துக் கொண்டு இந்திரா எதிர்ப்பில் மட்டும் ஒற்றுமையாக இருந்தார்கள்.

''நந்தவனத்தி லோர் ஆண்டி - அவன்.
நாலாறு மாசமாய் குயவனை வேண்டி
கொண்டுவந்தானெரு தோண்டி அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி.'
என்பது ஒரு சித்தர் பாடல்.

ஜனதாக்கட்சியின் நிலையும் இப்படியே முடிந்தது.

ஜனநாயகத்தில் மக்கள் சக்தி மகத்தானது. 1977-ம் ஆண்டில் இந்திராவை ஒதுக்கித் தள்ளிய அதேமக்கள் சக்தி இன்று மீண்டும் அவரை அரியணைக்குக் கொண்டு வருகிறது.

தமிழ் நாட்டிலும் திசை மாறிக்காற்றடிக்கிறது. கலைஞரின் அரசியல் சாணக்கியத்துக்கு வெற்றிகிடைத்திருக்கிறதென்றேசொல்லவேண்டும்

இனி தமிழ்நாட்டில் கட்சித் தாவல்கள் இடம் பெறக் கூடும். எம். ஜி. ஆர் அரசுக்கே நெருக்கடி ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஃ ஃ

தங்கத்தின் விலை உச்சத்துக்குப்போய்க்கொண்டிருக்கிறது.

தங்கம் என்ற பெயரைக் கூப்பிட்டால் கூடவிலை கூடும் போலிருக்கிறது.

தங்கத்தின் விலை இன்னும் அதிகரிக்க வேண்டும் தங்கமே வேண்டாம் என்று பெண்களே வெறுத்து ஒதுக்க வேண்டியநிலை ஏற்படவேண்டுமென்கிறர் ஒரு நண்பர்.

சமீபத்தில் எனக்குத்தெரிந்த அன்பர் தமது மகளுக்கு மணம்பேசினர். எல்லாம் நல்லபடியாக முடிந்தது. பதிவுத் திருமணமும் சிறப்பாக நடைபெற்றது. மணப்பெண்ணுக்கு நகைபோடுவது பற்றிப்பேச்சு வந்தது. மாப்பிள்ளை வீட்டார் எதையும் டிமாண்ட் செய்யவில்லை. ஆனல் மணப்பெண் என்ன சொன்னர் தெரியுமா?

அக்காவுக்குப் போட்ட நகைகள் இங்கேவங்கியில்பாதுகாப்பாக வைத்திருக்கிறீர்கள் பாதுகாப்பதற்காக வருடா வருடம் பணம் வேறுகட்டுகிறீர்கள். அக்கா வெளிநாட்டிலிருக்கிற எனக்கும் போடப்படும் நகை நானும் வெளிநாடு சென்றதும் வங்கியில் தானே கிடந்து தூங்கும் இதனுல் யாருக்கு என்னலாபம்?

நியாயம் தானே! இப்படி எவ்வளவு பணம் வீணுக முடங்கிக்கிடக்கிறதோ!

— **ஊர்சுற்றி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவினைக்கே எதிர்ப்பு தமிழ் மக்களுக்கு அல்ல

## யாழ்ப்பாணத்தில் சிறில்மத்யூ

(யாழ்ப்பாணம்)
''தமிழ் மக்களுக்கு நான் செய்த வகையிலும் விரோத மானவனல்ல. ஆனல் பிரிவினையை நான் எதிர்க்கிறேன். பிரிவினையையும் தமிழர் விடுதலைக் கூட்டணியையும் நான் பாராளுமன்றத்திலும் கண்டித்திருக்கிறேன்.''

இவ்வாறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு சிறில் மத்தியூ யாழ்ப்பாணத்தில் கூறினர்.

யாழ் ஐக்கிய தேசியக்கட்சி காரியாலயத்தில் அமைச்சருக்கு பருத்தித்துறை ஐ. தே க. அமைப்பாளர் திரு. வி. சந்திரசேகரம் தலைமையில் அளிக்கப்பட்ட வரவேற்பின் போது பேசுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினர்,

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

நான் தமிழ் மக்களுக்குப் பெரியவன் என்று சொல்வதில் அத்தமில்லை. எனக்குக் கீழ் உள்ள புகையிலைக் கூட்டுத்தாபனத்தின் இயக்குநராகத் திரு. கே. கணேசலிங்கம் பணிபுரிந்து வருவதோடு சகல கூட்டுத்தாபனங்களினது நிதி ஆலோசகராகவும் பணிபுரிகிறர், வேறு பல தமிழர்களும் எனது அமைச்சில் பணிபுரிந்துவருகிறர்கள்.

எமது அரசு பிரிவினையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டாது.

இந்த நாட்டில் எப்பாகத்திலும் தமிழர்-சிங்களவர் முஸ்லிம் வேறுபாடின்றி காணி வாங்கவும் வீடு கட்டவும் தொழில் செய்யவும் வர்த்கம் செய்யவு ம்உரிமை இருக்க வேண்டும்,

தமிழ் மாணவர்களுக்கு எதிராக இருந்வந்தத 'தரப்படுத்தல்முறையை எமது அரசே நீக்கியது. அதேபோன்றுசகல பிரச்னைகளையும் தீர்த்துக் கொள்வதில் பாரபட்சமின்றி நடக்க அரசு உறுதிபூண்டுள்ளது.

ஏதாவது ஒருதொழில் அல்லது தொழிற்சாலை லாபகரமாக இயங்கும் என்று கருதினல் வடக்கு -கிழக்கு, தெற்கு-மேற்கு என்று பாரபட்சம் காட்டமாட்டோம். தேவையான இடங்களில் அவற்றை நிறுவுவோம்.

அபிவிருத்தித் திட்டங்கள் அதிகரித்துள்ளமையால் சிமெந்து தேவையும் அதிகரித்து வருகிறது.

காங்கேசன்துறை தொழிற்சாலையிலேயே சிமெந்தின் உற்பத்தியை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

புத்தளம் தொழிற்சாலையிலும் விரைவில் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப் படும். (இ)

......

## கடகடப்பு வெளியீடு

புதிய நகைச்சுவை மாத இதழான 'கடகடப்பு' சஞ்சிகையின் வெளியீட்டு விழா அண்மையில் அரியாலையில் நடைபெற்றது.

முற்றிலும் மாணவ எழுத்தாளர்களின் கூட்டு முயற்சியில் உருவாக்கப்பட்ட 'கடகடப்பு' நகைச்சுவை இதழின் வெளியீட்டு விழாவிற்கு மாணவ எழுத்தாளர்களும் மற்றும் எழுத்தாளர்களும் சமூகம் அளித்திருந்தனர்.

இச்சஞ்சிகையின் ஆசிரியரான செல்வன் வி. சந்திரகுமார் பேசுகையில் ''இன்று இலங்கையில் பல புதிய மாணவ எழுத்தாளர்கள் தரமிக்கஆக்கங்களை படைத்து வருகிறர்கள். இலங்கையில் எந்தப் பத்திரிகையும் ஆற்றுத நல்ல சேவையை 'ஈழநாடு' பத்திரிகை செய்து வருகிறது. இவர்கள் மாணவர்களுக்கென வாரமலரில் ஒரு பக்கத்தை ஒதுக்கி மாணவர்களின் இலக்கிய ஆர்வத்தையும் எழுத்தார்வத்தையும் வளர்த்து வருவதுடன் மாணவ எழுத்தாளர் பலரையும் உருவாக்கியுள்ளமை மெச்சத்தக்க விடயமாகும் இதே போன்ற சேவையை ஏனைய பத்திரிகைகளும் செய்ய முன்வர வேண்டும்'' என்றர் அடுத்துப்பேசிய 'கடகடப்பு' இணை ஆசிரியர் செல்வன் ஏ. விஜயராஜ் இலங்கை வாசகர்கள் தரமானவர்கள் எதிலும் தரத்திற்கே முதலிடம் கொடுப்பவர்கள் இந்தியாவிலிருந்து வரும் பல இலக்கிய உணர்வேயற்ற ஆபாசம் நிறைந்த பத்திரிகைகளை இனம் கண்டு நிராகரித்து விடுகிறர்களென்றர்.

இறுதியில் மாணவ எழுத்தாளன் செல்வன் செ. இராஜகுலசிங்கம் நகைசுவையுடன் கூடிய 'கடகடப்பு' சஞ்சிகையை அதுவும் மாணவர்கள் வெளியிட்டுவைப்பது மிகவும் மகத்தான துணிச்சலான செயல் என்றர்.

'கடகடப்பு' நகைசுவை இதழை அதன் ஆசிரியர் செல்வன் வி. சந்திரகுமார் வெளியிட்டுவைத்தார்.

## காரைநகரில் திருட்டு

(காரைநகர்)
காரைநகரிலுள்ள வீடொன்றை இரவு வேளையில் உடைத்து திருடர்கள் 13,650 ரூபா பெறுமதியான நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர் என்று பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளியன்று இரவு முதல் மறுநாள் காலைவரையிலான நேரத்திலேயே இத்திருட்டு இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ)

# மட்டு, அரசடி ம. வித்தியாலயம் சகலவசதிகளையும் பெறும்

[மட்டக்களப்பு]
மட்டக்களப்பு அரசடி மகா வித்தியாலயத்திற்கு இரண்டரை லட்சம் ரூபாய் செலவில் சகல வசதிகளும் கொண்ட இருமாடிக் கட்டிடம் அமைக்கப்படும். இதற்கான நிதியை மட்டுநகர் முதல்வரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரை ஒதுக்கீடு செய்துள்ளார்.

மட்டக்களப்பு அரசடி மகா வித்தியாலயத்தில் திரு. டி. எஸ். கே. வணசிங்காவின் இடமாற்றத்தின் பின்பு புதிய அதிபராக நியமனம் பெற்ற திருமதி இராஜு நாகராஜா பாடசாலையின் குறைபாடுகள், அபிவிருத்தி குறித்து அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து பாடசாலைக்கட்டிடம், தளபாடங்கள், ஆசிரியர்கள், விஞ்ஞான உபகரணங்கள் பற்றுக்குறை முதலியவை சம்பந்தமாகத் தாம்கல்வி இலாகாவை தேருவதாக அமைச்சர் [illegible] தார்.

## மன்னார்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

### காணியை பார்வையிட்டனர்

[மன்னார்]
மன்னாரில் அமையவிருக்கும் புதிய பஸ்நிலையக் காணியை மூதூர் எம். பி.யும் மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனப் மஹ்றூப், பிரதமர் அலுவலகத்தின் முக்கிய பிரமுகர் ஜனப் காசிம் ஆகியோர் பார்வையிட்டனர்.

பஸ்நிலையத்தின் காணிக்கு மண்போட்டு நிரப்புவதற்கான வர்த்தகர்களின் தலைவர் ஜனப் எஸ். ஏச்.ஏ. ரசீட், ஜனப் கே. எம்.ஏ. அக்பர் ஆகியோர் மாவட்ட அமைச்சரையும், முக்கிய பிரமுகர் ஜனப் காசிம் ஆகியோரை வரவேற்றனர்.

புதியபஸ்நிலையம் அமையவுள்ள காணியிலுள்ள பள்ளத்தை நிரப்ப மன்னார் வர்த்தகர்கள் இதுவரை 75 ஆயிரம் ரூபாவை செலவுசெய்துள்ளனர். பள்ளம் நிரப்பும் வேலைகள் மிகவும் துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருப்பதைப் பார்வையிட்ட மன்னார் மாவட்ட அமைச்சரும், பிரதமர் அலுவலகத்தின் முக்கிய பிரமுகர் ஜனப் காசிமும் மன்னார் வர்த்தகர்களைப் பாராட்டினர்.

### தையல் இயந்திரங்கள் வழங்கப்படும்

(மன்னார்)
மன்னார் பகுதி சமூக சேவை இலாகர வழங்கும் மாதாந்த உதவிப்பணம் பெறும் தகுதியான வறிய குடும்பங்களுக்கு தையல் மெஷின்கள் வழங்கப் படவிருக்கிறது. இத்தகவலை சமூகசேவை அதிகாரி திரு. தட்சணாமூர்த்தி தெரிவித்தார்.

முதலில் தெரிவுசெய்யப்படும் 5 குடும்பங்களுக்குமுதன்முறையாக தையல்மெஷின்கள் வழங்கப்படும்.

### செருப்பினால் வாங்கிக்கட்டினார்

[மன்னார்]
பஸ்ஸில் இருக்க இடமில்லாததால் நின்றுகொண்டு பிரயாணம்செய்த பெண்ணிடம் சேட்டைவிட்டவர் செருப்பினால் வாங்கிக்கட்டினார்.

மேற்படி சம்பவம்பற்றிக் கூறப்படுவதாவது:

வவனியா மன்னார் பஸ்ஸில் இருக்க இடமில்லாததால் ஒரு பெண் பஸ்ஸில் ஏறி நின்று கொண்டு பிரயாணம் செய்தாராம். இவருக்குப்பின்னல் நின்றவர் அப்பெண்ணுக்குப் பல சேட்டைகள் விட்டுத்தொல்லை கொடுத்தாராம். இவரது தொல்லைகளைத்தாங்கமுடியாத அப்பெண் தனது காலிலுள்ள செருப்பைக் கழற்றி தொல்லை கொடுத்த நபருக்கு அடித்து விட்டார்.

அதன்பின் பஸ்சில் பிரயாணம் செய்த சக பிரயாணிகள் அப்பெண்ணை சமாதானப் படுத்தி பெண்ணின் கோபத்தைத் தணித்து தொல்லை கொடுத்த நபரைக் காப்பாற்றினர்.

### முருகன் ஆலய நிர்வாகிகள்

(மன்னார்)
பேசாலை முருகன் ஆலய நடப்புவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்; டாக்டர் திரு. எஸ். பொன்னம்பலம், உபதலைவர்: திரு. எம். மலராசா, செயலாளர்: திரு. ப. சுந்தரராசா, துணைச்செயலாளர்: திரு. ஆர். மாரிமுத்து. பொருளாளர்: திரு. கே. சுந்தரராசா, துணைப்பொருளாளர்: கே, வைத்திலிங்கம்.

ஏழுபேர்கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

# செலாவணி மாற்றமும் மாவின் விலை ஏற்றமும்

(நேற்றைய தொடர்ச்சி)
1978 ம் ஆண்டுக்கான அரசின் செலவு ரூபா 188450 இலட்சமாகும். இது, ரூபா 104,030 இலட்சம் கொண்ட மீண்டெழும் செலவையும், முற்பணக்கணக்குகளின்கீழ் ரூபா 18,310 இலட்சம் கொண்ட தேறிய வெளிக் கொடுப்பனவையும் கடன் கரைப்பு நிதிய உதவு தொகைகள் கடன்தீர்க்கொடுப்பனவுகள் உட்பட, ரூபா 66060 இலட்சம் கொண்ட மூலதனச் செலவையும் உள்ளடக்குகிறது. அரசிறையின் மொத்தச் சேகரிப்புக்கள் ரூபா 116,330 இலட்சம் மட்டுமேயாகும். இது ரூபா 72,120 இலட்சம் கொண்ட வரவு- செலவுத்திட்டக் குறைக்கு விளைவாயிற்று. இக்குறை உள்நாட்டு மூலங்களிலிருந்தான ரூபா 27,780 இலட்சம் கொண்ட கடன் பாடுகளாலும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட ரூபா 43,760 இலட்சத்தாலும், ரூபா 580 இலட்சம்கொண்ட காசுநிலுவைகள் வாயிலாகவும் நிதியிடப்பட்டது, இத்தொழிற்பாடுகள் ரூபா 1160 இலட்சம்கொண்ட

**1978ம் வருடத்திய மத்தியவங்கியின் பொருளாதார மீளாய்வு**

வங்கிக்கடன்பாடுகள் திறைசேரியின் காசு நிலுவையிலேற்பட்ட ரூபா 580 இலட்சம் கொண்ட வீழ்ச்சி ஆகியவற்றால் உருவான ரூபா 1,730 இட்சம் கொண்டதொரு விரிவாக்கத் தாக்கத்தினை விளைவித்தன. எவ்வாறயினும் தேசிய அபிவிருத்தி வங்கியின் தொடக்க மூலதனமான ரூபா 3, 900 இலட்சம் தொடர்பான நிதி மாற்றல்களில் மேற்கொள்ளப்பட்ட சில சீராக்கங்கள், இடைப்போக்கிலுள்ள காசோலைகளின் மட்டத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு ஆகியவற்றின் காரணமாக அரசின் தேறிய இறைத் தொழிற்பாடுகள் ரூபா 8,900 இலட்சம் கொண்ட சுருக்கத்தைக் கொண்டிருக்கும். (பக்கம் 179)

மொத்த உணவு உதவு தொகை 1977 இன் ரூபா 14,240 இலட்சத்திலிருந்து 1978இல் ரூபா 21,620 இலட்சமாக அதிகரித்து, 50 சதவீதத்திற்கும் கூடியதொரு அதிகரிப்பைக் காட்டியது. 1978 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் எடுத்துரைக்கப்படு 1978 பெப்ரவரி 1 முதல் நடைமுறைக்கு வந்த உணவு உதவு தொகைகள் மீதான புதிய கொள்கைக்கு மாறாகவே, இவ்வதிகரிப்பு பதியப்பட்டுள்ளது. புதிய கொள்கையின்படி, பங்கீட்டு அரிசி குடித்தொகையில் குறைந்த வருமானத்தை உடைய ஏறக்குறைய அரைப் பங்கினருக்கு வரையறுக்கப் பட்டது. எவ்வாறயினும் உணவு உதவு தொகையில் எவ்வாறயினும் உணவு உதவு தொகையில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பு 1977இல் மேற்கொள்ளப்பட்ட பொருளாதாரச் சீர் திருத்தங்களைத் தொடர்ந்தே ஏற்பட்டுள்ளது. செலாவணி வீதங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட மாவின்விலை பெருமளவில் அதிகரித்தது, இத்துடன் நெல் மீதான உத்தரவாதவிலை புசல் ஒன்றுக்கு ரூபா 33 இலிருந்து ரூபா 40 ஆக அகர்க்கப்பட்டுள்ளது. இவற்றின் விளைவாக மா மீதான உதவு தொகை ரூபா 6,640 இலட்சத்தால் அதிகரித்த வேளையில், உள்நாட்டு அரிசி, நெல் ஆகியவை மீதான உதவு தொகை ரூபா 2,050 இலட்சத்தால் அதிகரித்தது. எவ்வாறயினும் இறக்குமதி செய்யப்பட்ட அரிசிக்கான ரூபாய் பெறுமதியில் அதிகரிப்பு காணப்பட்ட போதிலும் இறக்குமதிகளின் அளவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக, இறக்குமதி செய்யப்பட்ட அரிசிக்கான உதவுகொகை யூபா 40இலட்சத்தால் வீழ்ச்சியுற்றது. சீனியின் விற்பனையில் இருந்து பெறப்பட்ட ரூபா 310 இலட்சம் கொண்ட இலாபம் தொடர்பான சீராக்கங்களின் பின்னர் தேறிய உணவு உதவு தொகை ரூபா 21,320 இலட்சமாக அமைந்தது, (பக்கம் 210) (நாளை தொடரும்)

......

## மீண்டும் ஆரம்பிக்க கோரிக்கை

(மட்/நிருபர்)
மட்டக்களப்பு - யாழ்ப்பாணம் இரவு பஸ் சேவையை மீண்டும் ஆக்ப்பிக்கவும் இவ் வேண்டுகோளை யாழ். மட்டு நகர் பிரயாணிகள் மட்டக்களப்பு இ. போ. ச. உயர் அதிகாரிகளிடம் விடுத்துள்ளனர்.

கடந்த இருமாதங்களாக யாழ்ப்பாணம் மட்டக்களப்பு இரவு டஸ் சேவை நிறுத்திவைக்கப்பட்டது. இதனல் மாணவர்கள், வர்த்தகர்கள், உத்தியோகத்தர்கள் வாராந்தம் சென்று வருவது சிரமத்தை ஏற்பத்துகின்றது.

எனவே காலை பஸ் சேவை நடத்தினல் போதாது இரவு பஸ்சை மீண்டும் சேவையில் ஈடுபடுத்த வேண்டுருமனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

......

## மல்லாகம் நீதிமன்றம் நேரமாற்றம்

(மாவிட்டபுரம்)
மல்லாகம் மாவட்ட நீதிமன்றம் கூடும் நேரங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக நீதிபதி திரு. எஸ். ஆனந்தக்குமாரசாமி அறிவித்துள்ளார்.

புதியநடைமுறைப்படி நேற்று முதல் மல்லாகம் மாவட்டநீதிமன்றம் முதனிலை நீதிமன்றமும் காலை 8-30 மணிக்குக் கூடி நண்பகல் 12 மணிவரை வழக்கு அலுவல்கள் நடைபெற்று பின்னர் மீண்டும் ஒரு மணிக்கு கூடி 3-15 மணிவரை அலுவல்கள் நடைபெற்று வருகின்றன. முன்னர்நீதிமன்றம்காலை9-15 க்கு பின்பே ஆரம்பிக்கப்பட்டு சிலநாட்களில் நண்பகலுடனேயே மூடப்பட்டுவந்தது. (அ)

## மன்னாரில் வீடில்லாப் பிரச்னை தீர்கிறது

(மன்னார்)
. மன்னாரில் மேலும் இரு வீடமைப்புத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. தற்போது இரு வீடமைப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மன்னார் வீடமைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாகவே மேலும் இரு வீடமைப்புத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன

இந்த வீடமைப்புத் திட்டங்களால் மன்னாரில் வீடில்லாப் பிரச்னை முற்றாக நீங்கிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# கருணாநிதி-இந்திரா பரஸ்பரம் பாராட்டு

சென்னை, ஜன. 7
இந்திய லோகசபைத் தேர்தலிலும் பாண்டிச்சேரி சட்டசபைத் தேர்தலிலும் இந்திரா காங்கிரசுக்கும் அதன் கூட்டணி கட்சிகளுக்கும் கிடைத்துள்ள வெற்றி குறித்து தி மு க தலைவர் திரு. மு. கருணாநிதி திருமதி இந்திரா காந்திக்கு பாராட்டுச் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் தி மு க வுக்கும் அதன் கூட்டணிக்கும் கிடைத்த வெற்றி குறித்து திருமதி இந்திரா காந்தி திரு. கருணாநிதிக்கு பாராட்டுச் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார். (இ)

# தமிழக-புதுச்சேரி
## மக்கள் கனவு நனவாகியது
### கருணாநிதி பெருமிதம்

சென்னை, ஜன. 7
இந்திரா காங்கிரஸ்கட்சிக்கும் தி. மு. க. வுக்கும் நிலையான நட்புறவு ஏற்பட வேண்டும் என்பதே தமிழக-பாண்டிச்சேரி மக்களின் நீண்ட கால விருப்பம். அவர்களது விருப்பம் இப்போது நிறைவேறி உள்ளது.

இவ்வாறு தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

பாண்டிச்சேரி மந்திரிசபை அமைப்பது குறித்து தாம் ஓரிருநாட்களில் டில்லி சென்று திருமதி காந்தியுடனும் மற்றும் தலைவர்களுடனும் பேச்சு நடத்த உள்ளதாகவும் திரு. கருணாநிதி தெரிவித்தார். (இ)

## இன்றைய நெருக்கடியில்
# இந்திராவினாலேயே நாட்டுக்கு தலைமை வகிக்கமுடியும்
## பாண்டிச்சேரி மக்கள் நிரூபித்தனர் என்கிறார் மூப்பனார்

சென்னை, ஜன. 7
இந்தியாவின் இன்றைய நெருக்கடியான கால கட்டத்தில் திருமதி இந்திரா காந்தியினால் மட்டுமே இந்தியாவுக்குத் தலைமை வகிக்க முடியும் என்பதை பாண்டிச்சேரி மக்களின் தீர்ப்பு நிரூபித்து விட்டது.

இவ்வாறு தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. கறுப்பையா மூப்பனார் தெரிவித்துள்ளார்.

பாண்டிச்சேரி மக்கள் அ. தி. மு. க. வுக்கு எதிராக வாக்களித்து அவர்களுக்கு நல்ல பாடம் படிப்பித்து விட்டனர்.

பாண்டிச்சேரியில் ஆட்சி அமைப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் கட்சியின் மேலிடம் மேற்கொள்ளுமென்றும் அவர் நிருபர்களிடம் கூறினார். (இ)

# அதிமுகவுக்கு-45,623 வாக்கு தொகுதி எதுவும் இல்லை
## 2,174க்கு -- ஓர் இடம்

பாண்டிச்சேரி, ஜன. 7
பாண்டிச்சேரி சட்டசபைத் தேர்தலில் 68 ஆயிரத்து 30 வாக்குகளைப் பெற்ற தி. மு. க.வுக்கு 14 தொகுதிகள் கிடைத்துள்ள அதேவேளையில் 45 ஆயிரத்து 623 வாக்குகள் பெற்ற அ. தி மு.கவுக்கு ஒரு இடம்கூடக் கிடைக்கவில்லை.

தி.மு.க. 15 தொகுதிகளிலும், அ. தி. மு. க. 18 தொகுதிகளிலும் போட்டியிட்டன.

இதேசமயம் 2 தொகுதிகளில் போட்டியிட்டு 2,174 வாக்குகளைப் பெற்ற முஸ்லிம் லீக் ஒரு தொகுதியைக் கைப்பற்றியுள்ளது.

10 தொகுதிகளில் போட்டியிட்டு 22,892 வாக்குகளைப் பெற்ற ஜனதாகட்சிக்கு 3 தொகுதிகள். 2 தொகுதிகளில் போட்டியிட்டு ஒரு தொகுதியைக் கைப்பற்றிய மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட் கட்சிக்கு 4,944 வாக்குகள் கிடைத்தன. (இ)

......

## காங்கேசன்துறைக்கு புதிய ஏ. எஸ். பி.

[மாவிட்டபுரம்]
காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபராக திரு. ஹரஷன் விஜயக்கோன் நியமனம் பெற்றுள்ளார்.

காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபராக விருந்த திரு. இசுறுபாலா இடமாற்றம் பெற்றுச் சென்றதையடுத்து இவரது நியமனம் இடம் பெற்றது.

காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக விருந்த திரு. மில்ரோய் குறூஸ் இடமாற்றம் பெற்றுச் சென்றதையடுத்து அவரது இடத்திற்கு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக திரு. பேமின் பெர்னாண்டோ இடமாற்றம் பெற்றுவந்துள்ளார்.

சப் இன்ஸ்பெக்டர்கள் திரு. பார்தலோமியஸ், திரு. வீரசிங்கா ஆகியோரும் இடமாற்றம் பெற்று காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்திற்கு வந்துள்ளனர். (அ)

## வட பகுதியில் சமயக் கல்விக்கு 3 பாட நேரங்கள்

(உடுப்பிட்டி)
இவ்வருடம் முதல் வடபிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் 9ம், 10ம் வகுப்புக்களில் சமயக் கல்வி கற்பிக்கும் பொருட்டு வாரத்தில் மூன்று பாட நேரங்களை ஒதுக்கும்படி வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் சகல பாடசாலை அதிபர்களையும் பணித்திருக்கிறார். (அ)

## இந்திரா மௌனம்!

புதுடில்லி ஜன. 7
இந்தியத் தேர்தல் முடிவுகள் குறித்து எதுவும் வெளியிட திருமதி இந்திராகாந்தி நேற்று மறுத்துவிட்டார்!


தேர்தல் முடிவுகள் வெளிவரத் தொடங்கியதைத் தொடர்ந்து பத்திரிகை நிருபர்கள் நேற்று திருமதி இந்திராகாந்தியை அணுகி கருத்து கேட்டபோது, "சொல்லுவதற்கு ஒன்றும் இல்லை' என்று கூறி மறுத்துவிட்டதுடன், நேற்று முழு நாளும் தமது அறையில் அவர் ஓய்வெடுத்துக்கொண்டார்.

## பெண்ணின் தற்கொலை முயற்சி தோல்வி

[மட்டக்களப்பு]
உதயதேவி புகையிரதத்தின் முன் பாய்ந்து தன் உயிரை மாய்க்க முனைந்த பெண்ணின் முயற்சி தோல்வியில் முடிந்தது.

சம்பவதினம் மதியம் 1-30 க்கு மட்டக்களப்புப் புகையிரத நிலையத்தில் இருந்துபுறப்பட்ட உதயதேவியில் வந்தாறுமூலையைச் சேர்ந்த க. மாரிமுத்து (32 வயது) என்ற மணமான பெண் கொழும்பு நோக்கி வந்த மேற்படி புகையிரதத்தின் முன் பாய்ந்து தற்கொலை செய்ய ஓடிவந்தார். இவரின் பின்னால் பலர் துரத்திக் கொண்டு வருவதை அறிந்த புகையிரதச் சாரதி உடனடியாக ரயிலைநிறுத்தி அப்பெண்ணின் உயிரைக் காப்பாற்றினார். இதனால் ரயில் 15 நிமிடம் தாமதமானது.

பெண்ணின் இத்தற்கொலை முயற்சிக்குக் குடும்பப்பிரச்னையே காரணமெனத் தெரியவந்தது. (அ)



## பயிர்களை நோய் தாக்குகிறது

(மன்னார்)
மன்னார், யாதோட்டப் பகுதியில் நெற்பயிர்களை தத்துக்கிளி நோய் தாக்குவதாகவும் அந்நோயைக் கட்டுப்படுத்தி வருவதாவும் தேவையான கிருமிநாசினிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும் அறியப்படுகிறது.

......

## இடமாற்றம்

(புலோலி)
கல்முனைப்பட்டின சபையில் கணக்குப் பதிவாளராகக் கடமையாற்றிய திரு. செல்வபுவனேந்திரன் இம்மாதம் தொடக்கம் சாவகச்சேரி நகர சபைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். (அ)

# மகளிர் பாவனையாளர் தகவல் கல்வித்திட்டம்

[மாவிட்டபுரம்]
தெல்லிப்பழைப் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் எல்லைக்குள் மகளிர் பாவனையாளர் தகவல் கல்வித்திட்டத்தை அமுல்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுவீடன் நாட்டு சர்வதேச அபிவிருத்தி அதிகாரசபை, சுவீடன் கூட்டுறவு நிலையம், சுவீடன் கூட்டுறவுப்பாவனையாளர் வட்டங்களின் சமாஜத்தின் 15 இலட்ச ரூபா உதவியுடனும் புதுடில்லி சர்வதேச கூட்டுறவு இணைப்பு வலையக் காரியாலயத்தின் ஆலோசனைகளுடனும், நிபுணத்துவ உதவிகளுடனும் அகில இலங்கை ரீதியில்நடைமுறைப் படுத்தப்படஉள்ள மேற்படி திட்டத்தை தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க எல்லைக்குள் அமுல்படுத்த சங்கக்கிளைகள் மூலமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையினால் அமுல் செய்யப்படும் இத்திட்டத்தின்கீழ் மகளிரைத் திரட்டி அவர்களிடையே மனையியல், போஷாக்குணவு, சுகாதார வாழ்க்கை என்பன பற்றிய அறிவை வளர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

பாவனையாளர்களுக்கான தகவல்கள், போஷாக்கு என்பனவற்றின் முக்கியத்துவத்தைப் பற்றி இல்லத்தரசிகளுக்கு எடுத்து உணர்த்துவதும், உணவு வகைகளின் தரம் பற்றிக் கவனம் செலுத்துவதும், பாவனையாளர்களைப் பாதுகாப்பதில் கூட்டுறவுக்கு எந்த வகையில் ஒத்துழைக்க முடியுமென்பது பற்றி எடுத்துரைப்பது இத்திட்டத்தின் நோக்கங்களாக இருக்கும். இந்நோக்கங்களுக்காக மாதிரிச் சமையலறை, ஆய்வுகூடம் அமைத்தும், பிரசுரங்கள் வெளியிடும் திட்டங்களில் மகளிரை ஈடுபடுத்தியும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு வருடகால எல்லையைக்கொண்ட இத்திட்டத்தை நிர்வகிக்க ஒரு கமிட்டி நியமிக்கப்படுமெனவும் திட்டத்தை நடைமுறைப்படுத்த சுவீடன் நாட்டு நிபுணர்களது உதவியும் பெறப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்க பொதுமுகாமையாளர் திரு. சி. நவரத்தினம் இது குறித்த சுற்றுநிருபம் ஒன்றைச் சகல கிளைகளுக்கும் அனுப்பி மகளிரை இத்திட்டத்தில்சேர்க்குமாறு கோரியுள்ளார். (அ)

......

## தர்மகர்த்தா வெட்டிக் கொலை

(யாழ்ப்பாணம்)
கல்வயல் விநாயகர் ஆலயத்திற்கு முன்பாகவைத்து மட்டுவில் வடக்கு செல்வவிநாயகர் ஆலய தர்மகர்த்தாவான இராமலிங்கம் (60 வயது) கத்தியால் வெட்டிக் கொலைசெய்யப்பட்டார்.

சைக்கிளில் சந்தைக்குச் சென்று திரும்புகையிலேயே இவர் கையும் காலும் வெட்டப்பட்டுக் கொலைசெய்யப்பட்டார்.

கொலைசெய்யப்பட்ட இராமலிங்கம், கடந்த வருடம் தனது மருமகனைப் பொல்லால் அடித்துக் கொலைசெய்தாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டு வழக்கு நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## மாணவன் கொலை முயற்சி வழக்கு:
# நீதிமன்றம் வராத 10 சாட்சிகளுக்கு வாரண்ட்!

(யாழ்ப்பாணம்)
வட்டுக்கோட்டை வளாக மாணவன் கொலைமுயற்சி வழக்கில் 10 சாட்சிகளுக்கு நேற்று வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ் மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். ஜாமீல் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 77 மார்ச் 1ம் தேதி வட்டுக்கோட்டையில் [illegible] கொலைசெய்ய முயற்சித்ததாகவும், அதே நேரம், அதே இடத்தில் சுனில்ரத்நாயகாவை பொல்லால் அடித்துக் காயம் விளைவித்ததாகவும், ஜோன் யேசுதாசன், இராமலிங்கம் அபயகரன் ஆகியோர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி எஸ். நடராசா, சட்டத்தரணி சபாநாதன் ஆகியோர் ஆஜரானார்கள். 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி எம். மோதிலால்நேரு, சட்டத்தரணி எஸ்.. லோகேஸ்வரன் ஆகியோர் ஆஜரானார்கள்,

அரச தரப்பில் சட்டத்தரணி ஆர். தவராசா ஆஜரானார்.

நேற்று நீதிமன்றத்திற்கு 1ம் எதிரி மட்டும் வந்திருந்தார். 2ம் எதிரி நீதிமன்றத்திற்கு வரவில்லை.

இவ்வழக்கிலுள்ள 27 சாட்சிகளில் நேற்று 10 சாட்சிகள் சமுகமளிக்கவில்லை. 10 சாட்சிகளுக்கும் வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது.

வழக்கு ஏப்ரல் 1ம் தேதி வரை பின்போடப்பட்டுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுச்சேரியில் தி. மு. க. இ. காங். மு. லீக் கூட்டணி ஆட்சியைக் கைப்பற்றியது

## அ. தி. மு. கவுக்கு ஒரு தொகுதி கூட கிடைக்கவில்லை

பாண்டிச்சேரி, ஜன. 7 பாண்டிச்சேரியில் தி.மு.க-இந்திரா காங்கிரஸ் - முஸ்லிம் லீக் கூட்டணி அறுதிப்பெரும்பான்மைப் பலத்தைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

30 தொகுதிகளைக் கொண்ட பாண்டிச்சேரி சட்டசபையின் 25 தொகுதிகளை இக்கூட்டணி சுவீகரித்துள்ளது.

தமிழ் நாட்டில் தற்போது ஆட்சி நடத்திவருவதும் பாண்டிச்சேரியில் கடைசியாக ஆட்சி நடத்தியதுமான அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக்கழகம் ஒரு தொகுதியில்கூட வெற்றி பெறவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

### தி. மு. க. வுக்கு 14 தொகுதிகள்

15 தொகுதிகளில் போட்டியிட்ட தி. மு, க. வுக்கு 14 தொகுதிகள் கிடைத்தன.

### இந்திரா காங்கிரஸ்-10

13 தொகுதிகளில் போட்டியிட்ட இந்திரா காங்கிரஸ் 10 தொகுதிகளைக் கைப்பற்றின.

இரண்டு தொகுதியில் போட்டியிட்ட முஸ்லிம் லீக்கும் ஒரு தொகுதியில் வெற்றி பெற்றது.

### ஜனதா-3

அ. தி. மு. கவுடன் கூட்டாக ஒன்பது தொகுதிகளில் போட்டியிட்ட ஜனதாகட்சி 3 தொகுதிகளில் மட்டுமே வெற்றிபெற்றது.

2 தொகுதிகளில் போட்டியிட்ட மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி ஒரு தொகுதியைக் கைப்பற்றியது.

சுயேச்சை வேட்பாளர் ஒருவரும் வெற்றி பெற்றுள்ளார்.

14 உறுப்பினர்களுடன் முன்னர் ஆட்சி நடத்திய அ. தி. மு. க. 18 வேட்பாளர்களை நிறுத்தியிருந்தது. முன்னுள் முதலமைச்சர் திரு. வி. இராமசாமி உட்பட சகல வேட்பாளர்களுமே இம்முறை தோல்வி அடைந்தனர்.

அர்ஸ் காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ், லோக் தள் ஆகிய கட்சிகளும் எந்தத் தொகுதியையும் கைப்பற்றவில்லை. (இ)

### பாண்டிச்சேரி சட்டசபை முடிவு

| மொத்தத் தொகுதிகள் | | 30 |
|---|---|---|
| தி. மு. க. | - | 14 |
| இ. காங்கிரஸ் | - | 10 |
| முஸ்லிம் லீக் | - | 01 |
| ஜனதா | - | 03 |
| மார்க். கம்யூ. | - | 01 |
| சுயேசசை | - | 01 |
| அ. தி. மு. க | - | 00 |
| அர்ஸ் காங்கிரஸ் | - | 00 |
| இந்திய கம்யூ. | - | 00 |
| காந்தி-காமராஜ் காங்கிரஸ் | - | 00 |
| லோக் தள் | - | 00 |

## 'கருணுநிதி ஆலோசனையுடன் புதுவையில் ஆட்சி அமையும்'

பாண்டிச்சேரி, ஜன. 7 பாண்டிச்சேரியில் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட தி. மு. க. சட்டசபை உறுப்பினர்கள் அனைவரும் தி. மு. க. தலைவர் திரு. மு. கருணுநிதியின்ஆலோசனையை அடுத்து புதிய ஆட்சியை அமைப்பர் என்று பாண்டிச்சேரி தி. மு. க- இந்திரா காங்கிரஸ் -முஸ்லிம் லீக் கூட்டணி அமைப்பாளர் திரு, எம். ஏ. சண்முகம் தெரிவித்தார்.

புதியசட்டசபை உறுப்பினர்கள் இன்று அல்லது நாளை சென்னை சென்று திரு. கருணுநிதியின் ஆலோசனைகளைப் பெறுவர் என்றும் அவர் கூறினுர்,

'தி. மு. க-இந்திரா காங்கிரஸ் கூட்டணி' மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யும் என்று தாம் நம்புவதாகவும் திரு. சண்முகம் தெரிவித்தார். (இ)

## "ஜனதா தோல்விக்கு காரணம்...

புதுடில்லி, ஜன. 7 ஜனதா கட்சி பிளவுண்டதே அதன் படுதோல்விக்குக் காரணம்.

இவ்வாறு முன்னுள் இந்திய வெளிநாட்டமைச்சரும் இப்போது மீண்டும் லோகசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவருமான திரு. அட்டல் பிகாரி வாஜ்பாய் தெரிவித்தார். (இ)

## பன்சிலால்,வாஜ்பாய், வர்மா பிஜுபட்நாயக் வெற்றி

புதுடில்லி, ஜன. 7 ஜனதாஆட்சி அரசில் ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட முன்னுள் பாதுகாப்பு அமைச்சர் திரு. பன்சிலால் மீண்டும் லோகசபைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

திருமதி காந்தியின் அமைச்சரவையில் முன்னர் அமைச்சராக இருந்த திரு. பன்சிலால் 50 ஆயிரம் அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்ருர்.

மற்றும் முன்னுள் மத்திய அமைச்சர்களான திரு. பிஜு பட்நாயக், ரவீந்திரவர்மா, அட்டல் பிகாரி வாஜ்பாய் ஆகியோரும் வெற்றிபெற்றுள்ளனர்.

### சுப்பிரமணியசவாமி வெற்றி

பம்பாய் வடக்கு தொகுதியில் ஜனதா கட்சி சார்பில் போட்டியிட்ட சுப்பிரமணிய சுவாமி 79 ஆயிரம் அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்றுள்ளார். (இ)

## மந்திரிகள் பாலாபழனுார், பட்டேல் ரவிராய் தோல்வி!

### முன்னுள் சபாநாயகர் தில்லோனும் தோற்ருர்

புதுடில்லி, ஜன. 7 முன்னுள் மத்திய அமைச்சர்கள் ஸ்டேட் அமைச்சர் சிலர் இம்முறை தோற்கடிக்கப்பட்டுள்ளனர்.

உள்துறை அமைச்சர் திரு. எச். எம். பட்டேல், பொதுப் பணித்துறை அமைச்சர் ஜனுப் சிக்கந்தர் பக்த், விவசாய மந்திரி திரு. பிரம் பிரகாஷ், சுகாதார அமைச்சர் திரு. ரவிராய் ஆகியோர் தோற்கடிக்கப்பட்டுள்ளனர்.

### பாலாபழனுார் படுதோல்வி

திரு. சரண்சிங்கின் காபந்து அரசில் எரிபொருள் அமைச்சராக இருந்த திரு. பாலா பழனுார் ஒரு லட்சம் மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளார்.

வெளிவிவகார ஸ்டேட் அமைச்சர் திரு. சமரேந்திர குண்டுவும் தோல்வியடைந்தார்.

முன்னுள் லோகசபை சபாநாயகர் திரு. தில்லோனும் தோற்கடிக்கப்பட்டுள்ளார். (இ)

## கிளிநொச்சி குருகுலத்தில் சைவபோதகர் பயிற்சி

(உருத்திரபுரம்)

கிளிநொச்சிக் குருகுலத்தில் சைவபோதகர் பயிற்சிக்காகிய மூன்று வருடத் திட்டம் ஒன்று இவ்வாண்டில் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இப்பயிற்சிக்கு க. பொ. த. பத்திர உயர்தரம், சாதாரண தரம், அதற்கு மேற்பட்ட கல்வித் தகைமை, ஒழுக்கத் தகைமை உடையவர்களிடையே சாதி, மத, பேதமின்றி 35 வயதுக்கு மேற்படாதவரிடையே தெரிவு நடைபெறும். ஆண், பெண் இரு பாலாரும் தெரிவுக்குத் தோற்றலாம்.

முக்கியமாக இப்பயிற்சியாளர் சைவ, வேதாந்த. பொதுத் தத்துவ உணர்வுச் சாதனை மூலமும், போதனை மூலமும் பெறுவதுடன் மனேதத்துவம், பொருளாதாரம், நிருவாகத் துறை, கணக்குப் பதிவியல், தொழில்நுட்ப அறிவு முதலிய இக்காலத் தேவைக்காகிய கருத்துக்களும் பெற்றவராய்ச் சாதனு வீரராய் அமையப் பயிற்சிபெறுவர். தமிழ். ஆங்கிலத்தில் போதிய தேர்ச்சியும், சமஸ்கிருதம், சிங்களத்தில் சாதாரண அறிவும் பெற்று நான்கு பாஷை கற்றவராய் விளங்குவர்.

இரு பாலாருக்கும் அவரவர்க்குகந்த தொழிற்பயிற்சி அளிக்கப்படும். சித்தாந்த, தமிழ்ப் பண்டிதர்களாய் பயிற்சி முடிவில் அவ்வக்கிராமத்தின் சைவபோதகர்களாய் நியமிக்கப்பட்டு, மக்களை வழிகாட்டும் குருமாராய், குருத்தினிகளாய் வெளியேறுவர். பயிற்சிக்காலத்தில் எல்லாம் இலவசமாய் வழங்கப்படும். இப்பயிற்சியைப் பெற விரும்புபவர்கள் இம்மாதம் 30ந் திகதிக்கிடையில் விண்ணப்பிக்க வேண்டுமெனக் குருகுல நிருவாகி திரு. வே. கதிரவேலு தம்முடன் தொடர்புகொள்ளும்படி வேண்டுகின்ருர். (அ)

## கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

(கொழும்பு)

ஆப்கானிஸ்தான் விவகாரத்தில் இலங்கை கடைப்பிடிக்கும் போக்கை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளது. 1978 ம் ஆண்டுபுரட்சியில் ஆப்கானிஸ்தான் மக்கள் பெற்றெடுத்த உரிமைகளை பாதுகாக்க இக்கட்சி தனது முழு ஆதரவையும் வழங்குமென அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க, சீனு, எகிப்து, பாகிஸ்தான் போன்ற பிற்போக்கு சக்திகளின் தாக்குதல்களிலிருந்து ஆப்கானிஸ்தானை பாதுகாக்க ரஷ்யா ஆதரவு வழங்குகிறது. சோவியத் ரஷ்யா ஆக்கிரமிப்பு நடத்துவதாகவோ, ஆப்கானிஸ்தான் உள் விவகாரத்தில் தலையிடுவதாகவோ குற்றம் சுமத்துவது அர்த்தமற்றதாகுமென்றும் அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

## 17 ஆயிரம் ரூபா பெறுமதி நூல்!

(பட்டிருப்பு)

பதினேழாயிரம் ரூபா செலவில் பழுகாமம் கிராமாட்சி மன்ற நூலகத்திற்கு புதிய நூல்கள் வழங்கப்பட்டுள்ளன,

இதற்கான அங்கீகாரத்தை மேற்படி மன்ற விசேட ஆணையாளர் திரு. எம். அந்தோனிமுத்து வழங்கியிருந்தார்.

## வெளிநாட்டவர் வருகை

(மன்னர்)

இலங்கை - இந்திய கப்பல் சேவை ஆரம்பித்ததை அடுத்து மன்னுரில் வெளிநாட்டு உல்லாசப்பிரயாணிகளைக் காணக் கூடியதாக இருக்கின்றது. இவர்கள் ஜப்பான், அமெரிக்க மேற்கு ஜேர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களெனச் சொல்லப் படுகிறது.

மன்னுரிலுள்ள ஹற்றன் நேஷனல் வங்கிக்கு வந்து வெளிநாட்டு செலாவணிப்பிரயாணக் காசோலைகளை மாற்றிய பின்பு கொழும்புக்குச் சென்றனர்.


# விசேட வெகுமதி

பிறிக்ஸ் அன்ட் ஸ்ட்ராட்டன் இயந்திரத்துடன் ஒரு பம்பைக் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு விவசாயிக்கும் 50/- ரூபா பெறுமதியுள்ள விசேட வெகுமதி உரிமைச் சீட்டு ஒன்றை வழங்க முன்வந்துள்ளோம். இந்த உரிமைச் சீட்டைக் கொண்டு, விவசாயிகள் தங்களின் அபிமானமுள்ள ஹேக்கெம் விவசாய இரசாயனப் பொருட்களை ஹேக்கெம் வியாபாரிகளிடம் கொள்வனவு செய்யலாம்.

இயந்திரம் வாங்கிய பற்றுச்சீட்டையும் உதிரிப்பாகப் புத்தகத்தையும் எமக்கு அனுப்பினுல் போதும். உடனடியாக நாம் அந்த பற்றுச் சீட்டையும் உதிரிப்பாகப் பதிவேட்டுப் புத்தகத்தையும் சேர்த்து விசேட வெகுமதி உரிமைச் சீட்டொன்றை உங்களுக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைப்போம்.

இப்பரிசுத்திட்டம் 15. 11. 79 இலிருந்து 31. 3. 80 வரையிலும் நடைமுறையிலிருக்கும்.

விபரங்களுக்குத் தொடர்பு கொள்க : பொறியியல் விற்பனை, பராமரிப்புப் பகுதி,

4 CYCLE BRIGGS & STRATTON

ஹேலீஸ் லிமிட்டெட்

25, பொஸ்டர் ஒழுங்கை கொழும்பு - 10.

தொலைபேசி: 96331 - 6.

பம்பு வியாபாரிகளுக்கும் விசேட சன்மானம் !

உங்களால் விற்பனை செய்யப்படும் பம்புகளுக்கு நாம் வழங்கும் ஒவ்வொரு 25 விசேட வெகுமதி உரிமைச் சீட்டுகளுக்கும் உங்களுக்கு ரூபா 500/- சன்மானம் !

Mel Ads


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**REGAL** (Jaffna)
Daily at 2-00, 4-30,
7-00 & 9-30 p.m.
Your last chance to re-live the greatest moments of movie musical magic...
**That's Entertainment Part-2**
Next Attraction
SKY RIDERS

100வது வெற்றித் திருநாளை நோக்கி ஓடுகிறது!
**மனோஹரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, சுஜாதா, சந்திரமோகன், கவிதா
நடித்த
**அந்தமான் காதலி**
(வர்ணப்படம்)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி: 10.30.பி.ப. 2.30,6.00, 9.30
சிவாஜி, ஜெயலலிதா
ஜி.வரலட்சுமி
நடித்த
(புத்தம்புதிய பிரதி)
**தாய்**

100-வது வெற்றித்திருநாளை நோக்கி
**சாந்தி** (யாழ்நகர்) தினசரி 10-30,2-30
போன்: 7642 6-30,9-45
ஜெய்சங்கர் ஸ்ரீதேவி எம். ஆர்.ராதா
அசோகன் ஸ்ரீகாந்த் மனோரமா சுருளி
நடித்த
**டாக்ஸி டிரைவர்**
வண்ணத்திரையோவியம்

A Hilarious Action Comedy Film For All Ages
**RANEE** (JAFFNA) Daily at: 10-30, 2-15
4-45, 7-15 & 9-45 p.m.
Terrence Hill Bud Spencer
Team up As A Pair Of Miami Beach
Combers Donning The Police
Unigorm Go About Busting
Cars And Crooks In Warner Brothers Presentation
**CRIME BUSTERS**

100-வதுவெற்றித்திருநாளைநோக்கி
**ஸ்ரீதர்** (யாழ் நகர்) தினசரி காலை 10-30, பி, ப. 2-30, 6-15, 9-15
சிவாஜிகணேசன்-சுஜாதா
நடித்த
**தீபம்**
(வெள்ளிவிழாச் சித்திரம்)
(வர்ணக்கலர்)

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, விஜயா, மனோரமா, தேங்காய் சீனிவாசன்
நடிக்கும்
**ஜெனரல் சக்கரவர்த்தி**
(ஈஸ்ட்மன் கலர்) டைரக்ஷன்: யோகானந்த்)
குடும்பத்துடன் பார்க்கவேண்டிய படம்

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ஜெய்சங்கர்
ஜெயசுதா நடித்த **பந்தாட்டம்**

**லிடோ** (யாழ்.நகர்) தினசரி: 10-30, 2-30, 6-30, 9-30
போன்: 7693
**வெள்ளிக்கிழமை விரதம்**


## விசேட சேவையை நடத்துமாறு கோரிக்கை

(மட்டக்களப்பு)

சிவராத்திரி தினமன்று விசேட ரயில், பஸ்சேவைகளை நடத்துமாறு மட்டுநகர் இந்து மாணவ பேரவையினர் போக்குவரத்து அமைச்சர் ஜனுப் எம். எச். மொகமட் அவர்களைக் கேட்டுள்ளது.

எதிர்வரும் மாசி மாதம் 14ம் திகதி சிவராத்திரி தினம். அன்றையதினம் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து சைவ அடியார்கள் இலட்சக்கணக்கில் திருக்கேதீஸ்வரத்தில் கூடி சிவாத்திரி விரதம் அனுஷ்டிப்பார்கள். இவர்கள் தங்கள் இடங்களில் இருந்து திருக்கேதீஸ்வரம் சென்றுவர அந்நாட்களில் விசேட ரயில், பஸ் சேவை வசதியைத் செய்துதர வேண்டும்.

பொதுவாக மட்டக்களப்பு, திருமலை, கொழும்பு, யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலிருந்து விசேட ரயில், பஸ் சேவையை நடத்தவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள பேரவையினர் இது சம்பந்தமாய் மட்டுநகர் முதல்வரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரையை நேரில் சந்தித்துப் பேசவுமுள்ளனர்.

......

## இலவச வீடுகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது

(மட்டுநகர் நிருபர்).

மட்டக்களப்பு நடுப்புலித்தோட்டம் என்னும் கிராமத்தில் இலங்கை கத்தோலிக்க இளைஞர் சங்கத்தினால் வறிய மக்களுக்கு இலவசமாய் வழங்கக் கட்டப்பட்டு வரும் வீடுகளின் எண்ணிக்கை இருபத்தைந்தாகக் குறைக்கப்பட்டுள்ளது ஏற்கனவே ஐம்பது வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டது. எனினும் கட்டுகின்ற வீடுகளை திருப்தியாகக் கட்ட வேண்டுமென்பதற்காக ஐம்பது வீடுகட்கு என ஒதுக்கப்பட்ட பணத்தினை இருபத்தைந்து வீடு கட்ட செலவிடப்படும். இதன் பிரகாரம் வீடுகள் சிறந்த முறையில் அமையவிருக்கின்றது.

இது இவ்வாறு இருக்க இவ் வீடுகளுக்கு முன்பு பொறுப்பாக இருந்த திரு. சி. பிலிப் என்பவருக்குப் பதிலாக சட்டத்தரணி திரு. லெஸ்லி செல்வநாயகம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

......

## பிச்சைக்காரர் அதிகரிப்பு

(மன்னார்)

மன்னாரில் பிச்சைக்காரர் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமிருக்கின்றனர். பெரும்பாலானோர் மலையகப் பகுதியைச் சேர்ந்தவர்கள். 77-ம் ஆண்டு ஆகஸ்ட் கலவரத்தின் பின் யாழ்ப்பாணம் வவுனியா பகுதியில் குடியேறி தற்பொழுது மன்னாருக்கு வந்துள்ளனர். இவு நோங்களில் குடும்பம் குடும்பமாக வந்து வர்த்தக நிலையங்களை அசுத்தப் படுத்துவதால் அவர்களை அகற்றும் பணியில் வர்த்தக பாதுகாப்பு சேவை ஊழியர்கள் ஈடுபட்டவண்ணமிருக்கின்றனர்.


**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி-வாணிஸ்ரீ
**குலமா குணமா**

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
**உழைக்கும் கரங்கள்**


பயிற்சிபெற்றுத்திரும்பிய

## தோ. பகுதி ஆசிரியர்களுக்கு மீண்டும் அதேபாடசாலைகள்

(யாழ்ப்பாணம்)

சுவீகரிக்கப்பட்ட தோட்டப் பாடசாலைகளிலிருந்து ஆசிரியர் பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்பட்டு பயிற்சியை முடித்த ஆசிரியர்களையும் ஏனைய ஆசிரியர்களைப் போலக்கணித்து வேறு மாவட்டங்களுக்கும் நியமிக்கவேண்டும் என்ற இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கக்கோரிக்கையை கல்விச் சேவைக் கமிஷன் குழு நிராகரித்திருக்கிறது. இவ்வாசிரியர்களை மீண்டும் அவர்கள் முன்னர் படிப்பித்த மாவட்டங்களுக்கே அனுப்பவேண்டும் என கல்விச் சேவைக் கமிஷன் குழுதீர்மானித்துள்ளது.

''பயிற்சிக்குமுன் 5 வருட வெளிமாவட்டச் சேவையை முடித்தவர்களை யாழ். மாவட்டத்திற்கு நியமிக்கவேண்டும் என்ற இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கத்தின் கோரிக்கையும் குழுவால் நிராகரிக்கப்பட்டு ஆறுவருட வெளி மாவட்டச் சேவையை முடித்தவர்களையே யாழ். மாவட்டத்திற்கு நியமித்துள்ளது.

இவ்விரண்டு கோரிக்கைகளையும் தவிர்ந்த ஏனைய இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கக் கோரிக்கைகள் கல்விச் சேவைக் கமிஷன் சேவைக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஏற்றுக் கொள்ளப்பட்ட கோரிக்கைகளாவன:

யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களைப் பிறப்பிடமாகக்கொண்டவர்கள் அதே மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

கிளிநொச்சி, ஊர்காவத்துறை, பருத்தித்துறைத் தொகுதியின் கிழக்குப் பகுதி ஆகியவற்றைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களுக்கும் அம் மாவட்டங்கள் வழங்கப்பட்டுள்ளது.

திருமணமான ஆசிரியைகளுக்குக் கணவன் வேலைசெய்யும் மாவட்டம் அல்லது சொந்த மாவட்டம் வழங்கப்பட்டுள்ளது.

திருமணமாகாத ஆசிரியைகளுக்கு மன்னார், வவுனியா மாவட்டங்கள் வழங்கப்பட்டுள்ளது.

திருமணமான ஆண்ஆசிரியர்களுக்கு திருமலை, மட்டக்களப்பு மாவட்டமும், திருமணமாகாத ஆண் ஆசிரியர்களுக்கு வடக்கு, கிழக்குத் தவிர்ந்த ஏனையமாவட்டங்கள் வழங்கப்பட்டுள்ளது.

(கெ-அ)

## இன்றைய பலன்

மார்கழி மாதம் 24-ம்திகதி
செவ்வாய்க்கிழமை
8-1-1980

சோதிடக் கலாநிதி

மேடம்:- பிறர்நம்பிக்கையைத் தவிர்த்துக் கொள்ளவும், பணவிடயத்தில் முன்னெச்சரிக்கை வேண்டும், குடும்பத்திலும் பிரச்சினைகள் தலைதூக்கும்.

இடபம்:- தருமகாரியங்களில் ஈடுபவீர்கள், விருந்தினர் வருகைக்குமிடமுண்டு, குடும்பத்தில் குதூகல நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

மிதுனம்:- ஒளிபரப்பும் வாழ்க்கை, தன்மான மிகுதிக்கும், தனவரவுக்கும் இடமுண்டு, பொன்னானதினம்.

கடகம்:- நீண்டநாள் கனவு இன்று நனவாகலாம். சகல துறைகளிலும் முன்னேற்றமுண்டு, பெரியோர் ஆதரவுமுண்டு.

சிங்கம்:- உடல்நலனும் பாதிக்கப்படலாம், திரைமறைவில் மோசடி நடக்கும், ஆயுதங்களுடன் பழகுபவர்கள் அவதானம் வேண்டும்.

கன்னி:- தொழில் சம்பந்தமான கவலை அதிகரிக்கலாம், உங்களை சிக்கலில் மாட்டிவைக்க சிலர் முனைவர், கருத்து வேற்றுமைக்கு இடமளியாது இருக்கவும்.

துலாம்:- புதிய நண்பர்களின் சேர்க்கை அதிகரிக்கும், தொழில்துறையிலும் முன்னேற்றமுண்டு, குடும்ப சுகமும் உண்டு.

விருச்சிகம்:- பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு, உள் வீட்டிலேயே உபத்திரவங்கள் தலைதூக்கும், பிணிக்கு இடங்கொடாது நடக்கவும்.

தனுசு:- பந்தபாசம் உங்களைப் பரவசப்படுத்தும், செய்காரியங்களில் தனிப்புகழ்பரவும், அன்னையின் அன்பும் தாராளமாகக் கிடைக்கும்.

மகரம்:- பிள்ளைப்பாசம் தலைதூக்கும், சமயோசித நடவடிக்கையின் மூலம் எதையும் வெற்றிகாண்பீர்கள், மகிழ்ச்சிகரமான தினம்.

கும்பம்:- அவசரப் போக்கைத் தவிர்க்கவும், அன்னியவாசமும் ஏற்பட இடமுண்டு, விழிப்புணர்ச்சி விரும்பத்தக்கது.

மீனம்:. கன்னல்போல் இனிக்கும் வாழ்க்கை. காதல் வசப்பட்டவர்கள் வெற்றி காண்பர், தொழிலும் சிறப்புப் பெறும்.

திருமலை
க.வேலுப்பிள்ளை

## முடியும் தறுவாயில் பாலவேலைகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சுமைதாங்கி ஆற்றின் மேல் போடப்பட்டு வரும் புதிய பாலவேலைகள் முடியும் தறுவாயில் உள்ளன.

இவ்வேலையை பொறுப்பேற்று துரித கதியில் நிறைவேற்று பொறியியலாளர் திணைக்களத்தை சகலரும் பாராட்டுகின்றார்கள்.

மட்டக்களப்பு விமான நிலைய வீதியில் அமைந்துள்ள இவ் வீதியில் ஏற்கனவே சுமைதாங்கி ஆற்றின் மேல் போடப்பட்டிருந்த றோட் சூறாவளியினால் அள்ளியெறியப்பட்டது. இதனால் அப்பகுதி மக்கள் தோணி மூலம் இருமாதமாய் ஆற்றைக்கடந்து வந்தனர் பின்னர் தற்காலிகமாய் அள்ளியெறியப்பட்ட வீதி புனரமைப்பு செய்யப்பட்டது. இருந்தும் வாகனங்கள் மிகவும் ஜாக்கிரதையாய் போக்குவரத்து செய்ய வேண்டியநிலை சில விபத்துக்களும் இதனால் ஏற்பட்டன.

இதன் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்டமந்திரி திரு. எம்.சி. கனகரெட்னம் மட்டுநகர் முதல்வரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரையுடனும் அப்பகுதி மக்கள் புதிய பாலம் அமைக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினர் அமைச்சர்களின் துரித நடவடிக்கையின் பயனாக புதிய பாலம் 6 மாத காலத்தினுள் முடிந்து விட்டது. இதனை பொறுப்பேற்ற இலாகவினை மக்களும் அமைச்சர்களும் பாராட்டுகிறார்கள்.

......

## தலைவராகத் தெரிவு

[மன்னார்]

மன்னார் மீனவர் கூட்டுறவுச்சங்கத்தின் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இக்கூட்டத்தின்போது பேசாலையைச்சேர்ந்த சட்டத்தரணியும் சமாதான நீதவானுமான திரு. கயஸ் பெல்டானோ மீண்டும் ஏகமனதாக மன்னார் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிவந்துவிட்டன

விஞவிடைகள் A/L1980 ஏப்பிரல்
பொருளாதாரம்
T. லோகநாதன் B. A.
இந்து நாகரிகம்
M. S. ஐயர் M. A.
அளவையியல்
R. நவரட்ணம் B. A.
கிடைக்குமிடங்கள்:
ஸ்ரீ லங்கா புத்தகசாலை
பூபாலசிங்கம் புத்தகசாலை
லோகநாதன் இன்ஸ்ரிரியூட்,
166/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
V. P. P. மூலமும்
பெற்றுக்கொள்ளலாம்.


ஈழநாடு The EELANAADU 50 சதம்

## வெடி கொளுத்தி மகிழ்ந்தனர்

இந்திய லோகசபை இடைத் தேர்தல் முடிவுகள் நேற்று வெளிவந்துகொண்டிருந்த அதேநேரத்தில் யாழ்நகரில் ஆங்காங்கே இளைஞர்கள் கூடி நின்று வெடிகள் கொளுத்தி மகிழ்ச்சி தெரிவித்தனர்! தி. மு. கழகமும் இந்திரா காங்கிரஸ் சட்சியும் அமோக வெற்றி பெற்றதற்கு மகிழ்ச்சி தெரிவித்து இளைஞர்கள் வெடிகள் கொளுத்தினர். யாழ். மாநகரசபை வாசலிலும், யாழ். எம். பி. திரு. யோகேஸ்வரனின் இல்லத்திலும் கூடி நின்ற இளைஞர்கள், தமது ஆரவாரத்தை வெடிகள் மூலம் தெரிவித்தனர்.


## நியூ கேம்பிறிட்ஜ்

ரியூரோறியல் இன்ஸ்ரிரியூட்ஸ்
திருநெல்வேலி சந்தி,
யாழ்ப்பாணம்.
10-01-80-ல் ஆரம்பம்
Radio & Electronic-with Practical
Advanced & Spoken English
பட்டதாரி ஆசிரியரால்
கற்பிக்கப்படும்.
சுருக்கெழுத்து, தட்டெழுத்து,
ஆங்கிலம் - காலை, வார இறுதி
வகுப்புகள்
I. B. K., I. A. A.
London Exam
V. M. பாக்கியநாதன்


# இ. காங்கிரஸ் முன்னணியில்!

## பல தொகுதிகள்: சில மதிப்பீடுகள்

(புதுடில்லி)

இந்தியாவின் ஏழாவது பாராளுமன்றத்துக்கு நடைபெற்ற இடைக்காலத்தேர்தலில் இதுவரை வெளியான முடிவுகளிலும், வாக்குகள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கும் தொகுதிகளிலும், இந்திராகாங்கிரசே முன்னணியில் திகழ்கிறது!

நேற்றிரவு வெளியான முடிவுகளின்படி விபரம் வருமாறு:

### ராய்பரெலி; மேடக் தொகுதி

இந்திராகாங்கிரஸ் தலைவி திருமதி இந்திரா காந்தி போட்டியிடும் இரண்டு தொகுதிகளிலும் அவரே முன்னணியில் நிற்பதாக நேற்று இரவு வெளியான செய்திகள் தெரிவிக்கின்றன. ராய்பரெலி தொகுதியில், ஜனதா வேட்பாளரிலும் பார்க்க 25,000 அதிகப்படியான வாக்குகளினாலும்; மேடக் தொகுதியில் 2 லட்சத்து எழுபதினாயிரம் அதிகப்படியான வாக்குகளினாலும் முன்னணியில் திகழ்கின்றார்.

### சுக்லா

முன்னாள் செய்தி ஒலிபரப்பு அமைச்சர் திரு. சுக்லா, (இந்திராகாங்கிரஸ்) ஜனதா வேட்பாளரைவிட 27,000 அதிகப்படியான வாக்குகளால் முன்னணியில் திகழ்கின்றார்.

### பஹுகுணா

உத்தரப்பிரதேசத்தில் இந்திராகாங்கிரஸ் வேட்பாளர் திரு, பஹுகுணா, ஜனதா வேட்பாளரைவிட 52,000 அதிகப்படியான வாக்குகளால் முன்னணியில் திகழ்கின்றார்.

### சஞ்சய்

திருமதி இந்திராகாந்தியின் புதல்வர் திரு. சஞ்சய் காந்தி உத்தரப்பிரதேசத்தில் ஜனதா வேட்பாளரைப் பார்க்கிலும் 30.000 அதிகப்படியான வாக்குகளால் முன்னணியில் திகழ்கின்றார்.

### சரண்சிங்

காபந்து பிரதமர் திரு. சரண்சிங், இந்திராகாங்கிரஸ் அபேட்சகரைவிட 62,000 அதிகப்படியான வாக்குகளால் முன்னணியில் திகழ்கின்றார்.

### சவான்

காபந்து அரசாங்கத்தின் துணைப்பிரதமரும் அர்ஸ் காங்கிரஸ் அபேட்சகருமான திரு. வை. பி. சவான், இந்திரா காங்கிரஸ் அபேட்சகர் திரு. சகனிலும் பார்க்க 18,000 அதிகப்படியான வாக்குகளால் முன்னணியில் நிற்கின்றார்.

### ஜெகஜீவன்ராம்

ஜனதா கட்சித் தலைவர் திரு. ஜெகஜீவன்ராம், இந்திராகாங்கிரஸ் அபேட்சகரைவிட 16.000 அதிகப்படியான வாக்குகளால் முன்னணியில் திகழ்கின்றார்.

## லீவு குறைப்புக்கு ஆட்சேபம் :

## ஆயிரத்துக்குமதிகமானோர் மகஜரில் கையெழுத்து

(யாழ்ப்பாணம்)

அரசாங்க ஊழியரின் லீவுகளை 21ஆகக் குறைத்ததை ஆட்சேபித்து யாழ்ப்பாணத்தில் இதுவரை 1000க்கும் அதிகமானவர்களின் கையெழுத்து பெறப்பட்டுள்ளதாக அரசாங்க லிகிதர் சேவைச்சங்க யாழ். கிளையினர் நேற்று தெரிவித்தனர்,

இந்தக் கையெழுத்துமகஜர், ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்படுமென்றும் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் அரசாங்க ஊழியர்களிடம் கையெழுத்து திரட்டப்பட்டுவருகிறது.

கையெழுத்து திரட்டும் முயற்சிக்கு அரசாங்க எழுதுவினைஞர்சங்கம் முழு ஒத்துழைப்பையும் வருவதுடன், ஏற்கனவே நடவடிக்கையும் எடுத்துள்ளது. (க)


## மரண அறிவித்தல்

### நா. முருகேசன்

யாழ்ப்பாணக் கச்சேரியின் முன்னாள் சுவடிக்காப்பாளரான நா. முருகேசன் அரியாலை மேற்கில் காலமானார். இவர் பார்வதியின் அன்புக் கணவரும், புவனேஸ்வரி, பரமேஸ்வரி, அம்பிகைபாகன், விவேகானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மா. அருளம்பலம், ஐ. கந்தசாமி ஆகியோரின் அன்பு மாமனாரும், நா. இராமலிங்கம் J. P. (ஆசிரியர்) அவர்களின் சகோதரனும், நா. பரமசாமி (ஆசிரியர்), நா. கணபதிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனருமாவார், அன்னாரின் பூதவுடன் இன்று (8-1-80) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். 4595


## நம்பலாம்; நடந்தது!

(கொழும்பு)

ரயிலில் மோதுண்டு மரணமானதாக நம்பப்பட்ட நபரொருவர் மீண்டும் வீடுதிரும்பிய சம்பவமொன்று அனுராதபுரத்தில் இடம்பெற்றுள்ளது.

இரத்மலானையில் ரயிலில் மோதுண்டதாகக் காணப்பட்ட சடலமொன்று அனுராதபுரம் பொலிசில் ஒப்படைக்கப்பட்டது. பொலிசார் பிரேதத்தை அநுராதபுரம் அரசினர் ஆஸ்பத்திரிக்குக் கையளித்தனர். மேற்படி நபரின் மைத்துனரும், தாயாரும் ஆஸ்பத்திரியில் பிரேதத்தை அடையாளம்காட்டினர்.

பிரஸ்தாப நபர் இரண்டு வாரங்களுக்கு முன் வீட்டைவிட்டு வெளியேறியதாகவும் அவர்கள் தெரிவித்தனர். பிரேதத்தை வீட்டிற்கு எடுத்துச்சென்று ஈமக்கிரியைகள் நடைபெற்று, ஏழு நாட்களின்பின் தானமும் வழங்கப்பட்டது.

இச்சடலத்தை அடையாளம் காணுவதற்காக கேகாலை; ருவான்வெல போன்ற பகுதிகளிலிருந்து வந்தவர்களும் சடலம் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டதையடுத்துத் திரும்பிச்சென்றனர்.

தானம் வழங்கப்பட்டு இரண்டுநாட்களின் பின் இறந்ததாகக் கருதப்பட்ட நபர் வீட்டிற்குத் திரும்பிவந்தார். இதைக் கண்டு உறவினர்கள் சிறிதுநேரம் பேரதிர்ச்சியடைந்தனர்.

மேற்படி நபர் வேலை தேடிப் பதவியாவிற்குச் சென்றதாக அவர் வீடு திரும்பியபின் வீட்டுக்காரர் தெரிந்துகொண்டனர். (வெ)

## 16 ஊழியர்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னர். இன்று அல்லது நாளை ஏதாவது அறிவித்தல் கிடைக்கலாமென்று எதிர்பார்க்கின்றனர்.

பாதிக்கப்பட்ட ஊழியர் விஷயமாக அரசாங்க எழுதுவினைஞர்சங்கப் பொதுச்செயலாளர் திரு. க. உருத்திரன், இணைந்தசேவை பணிப்பாளருடன் தொடர்புகொண்டு பிரச்னையைத் தீர்த்துவைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

திரு. உருத்திரன் நேற்று யாழ். கல்விக் கந்தோருக்கு வந்து, பாதிக்கப்பட்ட ஊழியர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். (க)

## காசுப்புத்தகங்கள் வழங்கப்பட்டன

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் குறைந்த வருமானமுடையவர்களுக்கும், குழந்தைகள் கூட உள்ளகுடும்பங்களுக்கும் காசுப்புத்தகம் வழங்கப்படாது இருந்தது.

வருமானம் குறைந்த இவர்கள் மன்னார் அரசாங்க அதிபரிடம் முறையிட்டதைத் தொடர்ந்து மேற்படி குடும்பத்தவர்களை விசாரணைசெய்து வறியவர்களுக்கு மீண்டும் காசுப்புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்தும் காசுப்புத்தகங்கள் கிடைக்காதவர்களுடைய வருமானம் போன்றவை விசாரணை செய்யப்படுகிறது.


## காணவில்லை

உடுப்பிட்டி சன்னதி றோட்டைச் சேர்ந்த திருமதி ச. செல்லம்மா (வயது 65) அவர்களை நேற்று நண்பகலில் இருந்து காணவில்லை, வெள்ளை நிற சட்டையும் வெள்ளை நிற சேலையும் அணிந்துகொண்டு யாழ். வைத்தியசாலைக்கு சென்ற இவரை கண்டவர்கள் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அல்லது சி. ஆனந்தசிவம், சன்னதி றோட், உடுப்பிட்டி என்ற விலாசத்திற்கு அறிவிக்கவும். சன்மானம் வழங்கப்படும், 4599

## இலங்கை இளங்கலைஞர் மன்ற கட்டிட நிதிக்காக

பிரபல தென்னிந்திய பாடகர் சங்கீத கலாநிதி எம். பாலமுரளிகிருஷ்ணா அளிக்கும் அரிய இன்னிசை விருந்து

9-1-80 புதன் மாலை
பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபம்

12-1-80 சனி மாலை 6 மணி
யாழ். திறந்தவெளிஅரங்கு

பிரவேசக் கட்டணம்: ரூபா: 25.00, 50.00, 100.00

4550

ரிக்கற் கிடைக்குமிடங்கள்:
- சின்னத்துரை அன்பிறதர்ஸ்
- சுபாஸ்கபே யாழ்ப்பாணம்
- வைற்கபின் நல்லூர்
- கமலா ஸ்ரோர்ஸ் சின்னக்கடை
- ராணி ஆபரண மாளிகை-கன்னாதிட்டி
- பொண்ட் கல்வி நிறுவனம்யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் ஜனவரி மாதம் 8-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QE/8940/78 The Eelanaadu P. B. No.49, Tlegram Eelanadu. Phone 389

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org